# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு2031 கார்த்திகை6 செவ்வாய்க்கிழமை(21-11-2000)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:292




# புலிகளின் வெற்றி குறித்து சர்வதேசமுமே பெருவியப்பு!

## அதைச் சகிக்க முடியாமல் அரசு விஷமப் பிரசாரம் என்கிறார் பிரபா

வவுனியா,நவம்பர்21

ஓர் இனத்தின் தேச விடுதலைப் போர் என்ற பரிமாணத்தில் எமது உரிமைப் போராட்டம் முழு உலகின் கவனத்தையும் ஈர்த்து வருகின்றது. அத்தோடு போரியல் கலையில் எமது இயக்கம் ஈட்டிவரும் அபார சாதனைகள் சர்வதேசத்தையும் திகைப்பிலும் ஆழ்த்தி வருகின்றன. இவ்வாறு எமது இயக்கமும் விடுதலைப் போராட்டமும் அனைத்துலக ரீதியாக அடைந்து வரும் பேரையும் புகழையும் சகிக்க முடியாத சிங்களப் பேரினவாதம் எமக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் ஒரு விஷமத்தனமான பிரசாரப் போரை நடத்தி வருகின்றது.

இவ்வாறு ஸ்ரீலங்கா அரசு மீது குற்றம் சுமத்தியிருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்.

'புலிகளின் குரல்' வானொலியின் பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி அச்சேவைக்கு வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்ட செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று தனது 10ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்த அந்த வானொலி தலைவரின் இந்த வாழ்த்துச் செய்தியை ஒலிபரப்பியது.

அந்தச் செய்தியில் வே.பிரபாகரன் தெரிவித்திருப்பதாவது-

சிங்களப் பேரினவாத அரசானது எமக்கு எதிராக ஓர் ஆயுதப்போரை மட்டுமன்றி ஒரு கருத்துப் போரை

(10ஆம் பக்கம் பார்க்க)

### நகரில் இன்று ஊர்வலம்

யாழ்ப்பாணம்.நவ.21

யாழ்.மாவட்டத்தில் மேல்நீதிமன்றம் அமைக்கவேண்டும் என்று கோரி யாழ்.சிறைச்சாலையின் முன் இன்று ஊர்வலம் நடத்தப்படவுள்ளது.

மேல் நீதிமன்றம் இயங்காத காரணத்தால் யாழ்.சிறைச்சாலையில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் இணைந்து இந்த ஊர்வலத்தை நடத்துகின்றனர்.

(உ-3-86)

### பொருள்களை இறக்கும் பணி பாதிப்பு

யாழ்ப்பாணம்.நவ.21

கடந்த நான்கு நாள்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. (உ-15)

### பாதுகாப்பு அனுமதியை உறுதிப்படுத்தும் பணி

யாழ்ப்பாணம்,நவ.21

வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்குப் பாதுகாப்பு அனுமதி கோரி விண்ணப்பித்த பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதைப் பரிசீலித்து உறுதிப்படுத்தும் பணியை வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையின் யாழ்.அலுவலகம் நேற்று ஆரம்பித்தது.

தீவகத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கு பாதுகாப்பு அனுமதி கிடைத்துள்ளதா என்பதைப் பரிசீலித்து உறுதிப்படுத்தும் பணி நேற்று இடம்பெற்றது.

513 ஆவது பிரிகேட்டைச் சேர்ந்தவர்கள் இன்றும் -

512 ஆவது பிரிகேட்டைச் சேர்ந்தவர்கள் நாளையும் - தமது பாதுகாப்பு அனுமதியைச் சரி பார்க்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3-8)

## கஸ்தூரியார் வீதி ஹோட்டலில் பிஸ்டல் குழுவின் சூட்டுக்கு பொலீஸ் கான்ஸ்டபிள் பலி!

### பதில் தாக்குதலில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்.நவ.21

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று பிஸ்டல் குழுவினர் என்று நம்பப்படும் நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொரு சிப்பாய் காயமடைந்தார்.

துப்பாக்கிச் சூட்டினை அடுத்து காயமடைந்த பொலீஸாரில் ஒருவர் அப்பகுதியில் மேற்கொண்டதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்; இருவர் காயமடைந்தனர்.

நேற்று மாலை 3.45 மணியளவில் இந்த ஹோட்டலுக்குள் திடீரென நுழைந்த இனந்தெரியாத நபர்கள் அங்கிருந்த மதுபான நிலையத்தில் அமர்ந்திருந்த இரு பொலீஸாரை நோக்கித் துப்பாக்கியால் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றனர் என்று கூறப்படுகின்றது.

இதனையடுத்து இச்சம்பவத்தில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

வவுனியா,நவ.21

மாவீரர் வார நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 27ஆம் திகதி வரை வழமைபோல் இடம்பெறவுள்ளன என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் முதன் முதல் வீரச்சாவடைந்த லெப்டினன்ட் சங்கர்(செல்வச்சந்திரன் சத்தியநாதன்) நினைவாக அவர் வீரமரணமடைந்த நவம்பர் 27ஆம் திகதியை மாவீரர் தினமாக விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்தியுள்ளனர். அதன் முன்னோடி நிகழ்வாக மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகின்றது.

இந்த மாவீரர் வாரத்தில் பொது இடங்களைச் சிரமதானம் செய்து சுத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கையில் பாதுகாப்புத் தீவிரம்

கொழும்பு,நவ.21

இன்று ஆரம்பமாகும் மாவீரர் வாரத்தையொட்டி கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பாதுகாப்பு என்றுமில்லாதவாறு பலப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே பலப்படுத்தப்பட்டிருந்த தலைநகரின் பாதுகாப்பு இந்த வாரம் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் -

திடீர் சோதனைகள் மேற்கொள்வதற்காக விசேட பொலீஸ் அணிகள் நகரின் பல்வேறு பகுதிகளிலும் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் - பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

மாவீரர் வார காலத்தில் தலை

(10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் வெள்ள அனர்த்தம் ஒரு லட்சம் குடும்பங்கள் பாதிப்பு

மட்டக்களப்பு,நவ.21

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தங்களால் 94ஆயிரத்து 534குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு அரச அதிபர் ஆர்.மோனகுருசாமி தெரிவித்தார்.

செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

வெள்ளம் காரணமாக பல கிராமங்களுக்கான வெளியுலகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான வீதிகளை மேவி 3 அடிக்கு மேல் வெள்ளம் பாய்வதால் போக்குவரத்துக்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு வாவியின் நீர் மட்டம் உயர்ந்து வருவதால் வாவியை அண்டிய வீதிகள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன.

கடல் கொந்தளிப்புக் காரணமாக வாவி நீர் கடலுக்குள் செல்வது தடைப்பட்டிருப்பதாகவும்-

அதனாலேயே வாவியின் நீர்மட்டம் உயர்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அகத்தியர் குளம், தரவைக் குளம் ஆகியவை உடைப்பெடுத்ததால் அவற்றை அண்டிய தரவைப் பகுதிகளில் சிக்கியுள்ள மக்கள் வள்ளங்கள் மூலம் மீட்கப்பட்டு வருகின்றனர். (உ-21-3-8-10)

## காலநிலை சீரில்லாததால் விமான சேவை நேற்று ரத்து

யாழ்ப்பாணம்,நவ.21

பலாலி - இரத்மலானை இடையிலான பயணிகள் விமானச் சேவை காலநிலை சீரில்லாததால் நேற்று ரத்து செய்யப்பட்டது.

நேற்று இரு சேவைகள் இடம் பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி முதல் சேவையில் பயணம் செய்வதற்காக 48 பயணிகள் நேற்றுக் காலை முதல் பலாலிக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

ஆனால் காலநிலை சீரில்லாததால் விமானச் சேவை ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதை

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் கொலைச் சூத்திரதாரிகளை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துங்கள்!

### மரண விசாரணைத் தீர்ப்பில் நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம்.நவ.21

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துமாறு யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா யாழ்.பொலீஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நிமலராஜனின் மரணம் தொடர்பாக விசாரணைகளை முடித்துத் தீர்ப்பு வழங்குகையிலேயே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

நேற்று நீதிவான் வழங்கிய தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நிமலராஜனின் மரணம் துப்பாக்கிச் சூட்டுக் காயத்தினாலும் மூளை செயலிழந்ததினாலும் இடம்பெற்றுள்ளது. இறந்தவரின் தாய், தந்தை, மைத்துனர் ஆகியோரும் அயலவர்களும் அளித்த சாட்சியங்களின்படியும் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேதபரிசோதனை அறிக்கையின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(20-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ. 817,539

## பல நோ. கூ. சங்கங்களுக்கான

# லொறிச் 'செஸிகளை' எடுத்துவர மூன்று மடங்கு கட்டணம் ஏன்?

## மகேஸ்வரன் எம்.பி. கேள்வி

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ். குடாநாட்டிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொள்வனவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் எட்டு லொறி அடிச் சட்டங்களை ('செஸி'களை) யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்கு மூன்று மடங்கு கட்டணம் அறவிடப்பட்டது ஏன் என்பதற்கு சம்பந்தப்பட்டோர் விளக்கம் தருவார்களா?

- இப்படிக் கேள்வி எழுப்பி இருக்கின்றார் ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட எம்.பியான தி.மகேஸ்வரன்.

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

லொறி அடிச்சட்டங்களை கொழும்பிலிருந்து தலா 80 ஆயிரம் ரூபா போக்குவரத்துச் செலவில் எடுத்து வர முடியும். யாழ்.குடாநாட்டிலுள்ள தனியார் வர்த்தகர்கள் ஐம்பதுக்கு மேற்பட்ட லொறி அடிச் சட்டங்களை இவ்வாறு தலா 80 ஆயிரம் ரூபா செலவிலேயே கொண்டுவந்துள்ளனர். ஆனால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கென கொள்வனவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் எட்டு அடிச்சட்டங்களுக்கும் கொண்டு வரும் செலவாக தலா 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டுள்ளது.

இது விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

அத்தோடு-

யாழ்.குடாநாட்டிலுள்ள அனைத்துப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் சுயமாக இயங்கவிடாமல் சமாசம் கட்டுப்படுத்துவதற்கான காரணத்தை கூட்டுறவாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அவர் தெளிவுபடுத்த வேண்டும்.

- இப்படி அந்த அறிக்கையில் அவர் கோரியுள்ளார்.

(உ)


**WESTERN UNION MONEY TRANSFER**

*வெஸ்ரேன் யூனியன் பணம் மாற்றுதல்*

உலகின் எப்பாகத்திலிருந்தும் *WESTERN UNION MONEY TRANSFER* ஊடாக யாழ். குடாநாட்டிற்குப் பணம் அனுப்பினால் அன்றைய தினமே பணம் உரியவர்களுக்கு வழங்கப்படும். பணத்தைப் பெறுவதற்கு பின்வரும் விவரங்களுடன் கீழ்வரும் முகவரிடம் தொடர்பு கொள்ளவும்.

1. பணம் அனுப்பியவர் பெயர்:-
2. பணம் பெறுபவர் பெயர், விலாசம், அடையாள அட்டை இலக்கம்:-
3. பணம் அனுப்பிய நாட்டின் பெயர்:-
4. அனுப்பியவருக்கு வங்கியால் வழங்கப்பட்ட இரகசிய இலக்கம்:-
5. அனுப்பிய தொகை:-

*ஏகமுகவர்:-*

WESTERN UNION MONEY TRANSFER,
MAHALUXMY STORES,
212, STANLEY ROAD,
JAFFNA.

(C/13917)



# HOUSE FOR RENT

**Modern and Fashionable Four Roomed House with all facilities. Two Kitchen one with pantry, Two Toilets, Garage, Large Hall at Kachcheri Nallur Road, Chundikuli close to Kachcheri and Nallur Temple Suitable for foreign organization. For detail contact**

**16/8, (40/36) Seeniear Lane, Kaladdy, Jaffna.**

(80722)


# UNIVERSITY OF JAFFNA

## TENDER NOTICE

The Chairman, Tender Board, University of Jaffna will receive sealed tenders from contractors registered with ICTAD for civil Engineering works or from Multi purpose Co-operative Socities for the "Construction of the cycle shed/generator room/stores at Faculty of Madicine, University of Jaffna.

Tender forms may be obtained from the Works Engineer (civil), University of Jaffna until 30.11.2000 on producing Registration book and cash payment for the following tender fee at the Shroff's counter of University of Jaffna.

| | |
|---|---|
| **Non-refundable deposit** | **- Rs. 500/-** |
| **Refundable deposit** | **- Rs. 5000/-** |

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box, kept at the Registrar's Office, University of Jaffna on or before 07.12.2000 at 10.00 a.m

Tender forms may be inspected by the tenderers free of charge at the Maintenance branch of this University during office hours if necessary.

*Registrar*
**University of Jaffna.** (C/13916)

*P.O.BOX 57*
*Thirunelvely,*
*Jaffna.*

## கரம், மேசைப்பந்தாட்ட போட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.21

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் 89ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி சங்கத்தால் நடத்தப்படும் கரம், மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. (இ-8)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

**வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

**வெளிவாரிப் பரீட்சைகள்**

**கலைமாணி பகுதி 1 - 1999**
**கலைமாணி பகுதி 11 - 1999**

மேற்படி தேர்வுகள் மார்கழி மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளன. இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 15 இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் 2000.12.01 (வெள்ளிக்கிழமை) திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

மேற்படி பரீட்சைகள் வவுனியா வளாகத்திலும் மன்னாரிலும் நடைபெறும்.

*பதிவாளர்,*
யாழ்.பல்கலைக்கழகம்.

2000.11.20 (C/13921)


**நாகம்ஸ்** சுன்னாகம்

**அர்ஜுன், ரோஜா, ரம்பா, ஆனந்தராஜ்**

நடித்த

**அடிமைச்சங்கிலி** (80727)

(ரீகல்) காட்சிகள் - 11.00, 2.30 (பு.நே.)



**ராஜா** யாழ்ப்பாணம்

**விஜய், சிம்ரன், மணிவண்ணன்**

மற்றும் பலரின் நடிப்பில் இனிய பாடல்கள் கொண்ட

***துள்ளாத மனமும் துள்ளும்***

காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)


# கல்வியங்காட்டில் திருடப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டன

கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து திருடப்பட்ட பொருள்கள் பொலீஸாரால் மீட்கப்பட்டதுடன் திருட்டுத் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 11ஆம் திகதி அதிபர் ஒருவரது வீட்டில் இருந்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 'டெக்', 'ரேடியோ' என்பன திருடப்பட்டிருந்தன.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலீஸார் டெக், ரேடியோ என்பனவற்றை விற்பனை செய்ய முயன்ற போது திருடர்களைக் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் மேலதிக விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ம-180)

# தமிழ் வர்த்தகர் கைது

மன்னாரிலிருந்து கொழும்புக்கு மீன் கொண்டு செல்பவர்கள் மூலம் ஆயுதங்களைக் கடத்த முற்பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில், தமிழ் வர்த்தகர் ஒருவர் விசேட பொலீஸ் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வர்த்தகர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார், முருங்கன் ஆகிய பகுதிகளுக்கு கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் சென்றதாகவும்-

அங்கு புலிகளின் பிராந்தியத் தலைவர் ஒருவருடன் ஆயுதக்கடத்தல் திட்டம் குறித்துப் பேசியதாகவும்-

பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம-8)

## கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றிய கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றிய பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட புதுமுக மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாணவ ஒன்றியத்தின் தலைவர் கேட்டுள்ளார். (ம-6)

## தவறிவிட்டது

**45, மணல்தறை லேன், கந்தர்மடம் எனும் முகவரியைச் சேர்ந்த த.தயாபரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல.760932590V) யாழ். சிவில் காரியாலயப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.** (C/13923)

# அறிவித்தல்

**"சர்வதேச ஊனமுற்றோர் தினம்"**

**தற்காலிக முகவரி :- பிரதான வீதி, தொல்புரம்**

எனக் குறிப்பிட்டு ரூபா 100 பெறுமதியான பற்றுச் சீட்டுக்கள் விற்பனையாகின்றன. இதை விற்பவர்களுக்கும் எமது சங்கத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

வைத்தியக் கலாநிதி -ந. சிவராஜா
தலைவர்

ஊனமுற்றோர் புனர் வாழ்வுச் சங்கம்,
47/2, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். (C/13922)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர்
திரு.ந.பரமசிவம் அவர்களின்
பாசமிகு தந்தையார்

## வேலாயுதர் நல்லதம்பி

அவர்கள் 19.11.2000 அன்று சிவபதமெய்தியதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/யாழ்ற்ரன் கல்லூரி,
காரைநகர்.

(80729)

# இதய அஞ்சலி

எமது தாதியர் பயிற்சிப் பாடசாலை அதிபர்
செல்வி பரமேஸ்வரி வீரகத்திபிள்ளை
அவர்களின் தந்தையார்

## கணபதி வீரகத்திபிள்ளை

அவர்களின் மறைவையொட்டி அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர்கள்,
A 86(BATCH),
யாழ். போதனா வைத்தியசாலை.

(80730)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு.அ.பிரதாபன் அவர்களின்
அன்புத் தாயார்

## திருமதி வள்ளியம்மை அப்புத்துரை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்.

(80725)

# நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

## காணாமல் போன படையினரின் பெற்றோர் சங்கம் ஏற்பாடு

கொழும்பு,நவ.21

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து டிசம்பர் 5ஆம் திகதி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கு காணாமல் போன படையினரின் பெற்றோர் சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்துக்கு முன்னால் நடைபெறும். நோர்வே அரசின் சமாதான முயற்சிகள் வெற்றி பெற வேண்டும் எனக் கோரியே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை தாம நடத்துவதாக காணாமல் போன படையினரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தின் தலைவர் ஈ.பி.நாணயக்காரா தெரிவித்தார்.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு நோர்வே தூதரகத்தைச் சென்றடைந்ததும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட இருப்பதாகவும். நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகளும் ஆதரவு தெரிவித்து சுமுகமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு முன்வர வேண்டும் என்றும் ஈ.பி.நாணயக்கார தெரிவித்தார்.

(ம-6)

# புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறிக்கொண்டு பேச்சு நடத்த முடியாது

## முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,நவ.21

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றுகூறிக்கொண்டு பேச்சு வார்த்தைக்கு அத்திவாரம்போட முடியாது. உலக வரலாற்றில் விடுதலைப் போராட்டங்கள் அனைத்தும் அடக்கப்பட்டதனாலேயே அவை பயங்கரவாதப் போராட்டமாக உருவெடுத்தன.

இவ்வாறு ஸ்ரீல.மு. காங்கிரஸின் மூத்த துணைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதூர்க்கனி கூறினார்.

பெரிய நீலாவணையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் பேசுகையில்:-

அமெரிக்காவின் பார்வையில் ஒரு காலத்தில் வியட்நாமின் விடுதலைப் போராட்டமும், பலஸ்தீன விடுதலைப் போராட்டமும் பயங்கரவாதப் போராட்டங்களாகவே கருதப்பட்டன. ஆனால் உலகில் விடுதலைப் போராட்டங்களை உலக நாடுகள் அங்கீகரிக்க முன் வந்த பொழுது அமெரிக்காவினுடைய பார் வையில் இருந்த பயங்கரவாத போராட்டங்கள் எல்லாம் விடுதலைப் போராட்டங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இன்றும் கூட அமெரிக்காவின் பார்வையில் லிபியா, ஈரான், ஈராக். சூடான், கொரியா போன்ற நாடுகள் பயங்கரவாத நாடுகளாகவும், விடுதலைப் போராட்டங்களும், இயக்கங்களும், பயங்கரவாத இயக்கங்களாவே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் விடுதலைக்காகப் போராட வந்த தமிழ் இயக்கங்களும் நசுக்கப்பட்ட காரணத்தினாலேயே அவை பயங்கரவாத இயக்கங்களாக உருவெடுத்தன என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றாக வேண்டும். விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்று கூறிக்கொண்டு பேச்சுவார்த்தைகளுக்கும் சமாதானத்திற்கும் அத்திவாரம் போட முடியாது என்று கூறினார். (8-4)

### இரு இளைஞர்களின் சடலங்கள் மீட்பு

கொழும்பு,நவ.21

வத்தளையிலும கந்தானையிலும் இரண்டு இளைஞர்களின் சடலங்கள் நிர்வாணமான நிலையில் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

வத்தளை ஹேக்கித்த வெலியமுன சந்தியில் சூட்டுக் காயங்களுடன் வாய் கறுப்புத் துணியாலும், கைகள் பின்புறமாகவும் கட்டப்பட்ட நிலையில் உடலில் பல கீறல் காயங்களுடன் ஒரு சடலம கடந்த வெள்ளி இரவு 9.15 மணியளவில் மீட்கப்பட்டது.

அதேதினம் கந்தானை மகுல் பொக்குனபார வீதியில் மற்றொரு சடலம் மீட்கப்பட்டது. கூரிய ஆயுதங்களால் குத்திக் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலம் காணப்பட்டது.

கொலை செய்யப்பட்ட இருவரும் 26 முதல் 28 வயதுக்குட்பட்டவர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இக்கொலைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலீஸார். இந்தக் கொலைகள் பாதாள உலக கோஷ்டியினரின் கைவரிசையாக இருக்கலாம் என நம்பப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

(ஐ-8)

### தாபரிப்புப்பணம் கட்டத் தவறியவருக்கு விளக்க மறியல்

வலி.வடக்கு,நவ.21

நீதிமன்றக் கட்டளையை ஏற்று தாபரிப்புப் பணம் கட்டத்தவறிய ஒருவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஐந்து மாதங்களாக உரிய தாபரிப்புப் பணத்தை கட்டாது விட்ட சுழிபுரத்தை சேர்ந்த ஆறுமுகம் உதயகுமார் என்பவரே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

(ம-86)

### ஆஸ்பத்திரிக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

வவுனியா,நவ.21

முழங்காவில வைத்தியசாலைக்கு இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை மன்னார் ஆயர் அதிவண. ராயப்பு யோசப் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (ஐ-3)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை



2000ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை தரம் 5 இல் சித்தியெய்திய

எமது மகன்

**காசிநாதன் சயந்தன்**

**புள்ளி : 143**

அவர்களைச் சித்திபெற ஊக்குவித்த அதிபர், வகுப்பாசிரியர் மற்றும் ஆசிரியர்களை

**பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

"காசிவாசம்"
சுழிபுரம்.

**அப்பம்மா, அப்பா, அம்மா.**

(C/13913)



# இலங்கை வங்கிச் சேவையின் வள்ளலே



உயர்திரு.

## சின்னையா நடராஜலிங்கம்

(இலங்கை வங்கி முகாமையாளர் - பருத்தித்துறை)

அவர்கள் எங்கள் அன்புக்கும் பெரும் மதிப்புக்குமுரியவர். இலங்கை வங்கியின் பாரம்பரியம், கோட்பாடுகள், நடைமுறைகள், செயற்பாடுகள் அனைத்துக்கும் அமைவாக செயற்பட்டு தன்னலம் கருதாது; வங்கிக்கும் வாடிக்கையாளப் பெருமக்களுக்கும் சேவையாற்றிய பெருமகன். ஆரம்பகாலம் முதல் எங்கள் வர்த்தக முயற்சிகளுக்கு எல்லாம் ஆக்கமும், ஊக்கமும் வழங்கிய பெருந்தகை. இன்று யாழ். மாவட்ட பிரதேச முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவருக்கு அந்தண சிவாச்சாரிகள் நல்லாசி வழங்க வடமராட்சி ஸ்ரீமத் நாராயணப்பிரபு அருள் மழை பொழிய இவரும் இவரது குடும்பத்தினரும் அதி உன்னத நிலை அடைந்து பெரு வாழ்வு வாழவேண்டி வாழ்த்துகின்றோம்.

**க.கா.சச்சிதானந்தனும்**
**குடும்பத்தினரும்,**
**சங்கை எம்பதி அம்மன் கோயிலடி,**
**மாவிட்டபுரம், தெல்லிப்பழை.**

*'ராகுல சூரியன்ஸ்'*
*பருத்தித்துறை.* (C/13911)


# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

குறிப்பு:- இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறியவந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**19.11.2000 (ஞாயிற்றுக்கிழமை) வரை கிடைத்த நிதி:-**

| | | ரூபா |
|---|---|---|
| | முன்கொண்டுவரப்பட்டது | - 804,082 |
| 01. | அ. குமாரவேலு - ஓய்வு பெற்ற அதிபர் - 132/1 கச்சேரி வீதி, யாழ்ப்பாணம் | - 200 |
| 02. | பாணா காமன்ஸ் - பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் | - 200 |
| 03. | உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அதிபர் ஆசிரியர்கள், ஊழியர்கள் | - 1,100 |
| | மொத்தம்: | - 805,582 |


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



தெல்லிப்பழை வாலிப ஐக்கிய சனசமூக நிலைய உறுப்பினரும் தற்போதைய போஷகருமாகிய

## திரு.நா.ஆறுமுகம் அவர்கள்

02.11.2000 அன்று சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டும் இவருடைய சமூகசேவை நீடிக்க வேண்டும் என்றும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*உரிமையாளர்:*
*கிருஷ்ணா தச்சுத் தொழிற்சாலை*
*கே.கே.எஸ் றோட்,*
*கோண்டாவில்.* (80714)

**செ.வீரசிங்கம்**
**குடும்பத்தினரும்,**
**ஊழியர்களும்.**


# கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் நகர பிதாவும்,
தினகரன் பத்திரிகைச் செய்தியாளரும்,
அகில இலங்கை சமாதான நீதிவானும்
சமூகத் தொண்டனுமாகிய

## சின்னத்தம்பி கந்தையா மயில்வாகனம்

அவர்கள் 14.11.2000 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார். அவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகளுக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**- வை.சின்னத்தம்பி குடும்பம்.**

*சாவகச்சேரி வடக்கு,*
*மீசாலை.* (80712)

# யாழ். மாநகரசபையின் உள்ளக பதவிஉயர்வுகள் தொடர்பாக விசாரிப்பதற்கு குழு நியமிக்கப்படும்

## குற்றச்சாட்டுக்களை அடுத்து மாநகரசபைக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். மாநகர சபையினால் அண்மையில் வழங்கப்பட்ட உள்ளக பதவி உயர்வுகள் தொடர்பாக விசாரணை செய்யக்குழு ஒன்று அமைக்கப்பட உள்ளது.

இது தொடர்பாக யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் திர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாநகர சபைக் கூட்டம் பிரதிமேயர் என். ரவிராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாநகரசபையின் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு சார்பு உறுப்பினரான ம. மங்களநேசன், உள்ளகபதவிஉயர்வுகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் இது தொடர்பான விளக்கம் தேவை என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்தப்பதவி உயர்வுகள் தொடர்பாக பிரதிமேயர் மற்றும் உறுப்பினர்களான எஸ் அரவிந்தன், எஸ். கனேந்திரன் ஆகியோருக்கும் முறைப்பாடுகள்கிடைத்ததாக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இது தொடர்பாக விசாரணையை மேற்கொள்வதற்கு நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் சபை உறுப்பினர்களை உள்ளடக்கிய விசாரணைக்குழு ஒன்றினை நியமிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மாநகரசபைக்கு கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட பக்ஸ் இயந்திரக்கொள்வனவில் ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக சபை உறுப்பினர் எஸ். கனேந்திரன் சுட்டிக் காட்டினார். இதுபோன்று எதிர்காலத்தில் ஊழல்கள்இடம்பெறாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

யாழ். நவீன சந்தையில் பாட்டா நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட கட்டடத்தில் தற்பொழுது சலுசலா நிறுவனம் இயங்கிக் கொண்டிருக்கிறது இதனால் பாட்டா நிறுவனத்துக்கு பாதிப்புஏற்பட்டுள்ளது என்று சபை உறுப்பினர் மு. தவநாதன் (புளொட்) சுட்டிக் காட்டினார்.

இது தொடர்பாக சலுசலா நிறுவனத்துக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இத்தகைய அணுகு முறைக்கு அந்த நிறுவனம் இணங்காது விட்டால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதி மேயர் என். ரவிராஜ் தெரிவித்தார்.

யாழ். நவீன சந்தையின் 25 ஆம் இலக்க கடை விவகாரம் தொடர்பாகவும் சபையில் பிரச்சினை எழுப்பப்பட்டது. இந்த விவகாரத்தில் மாநகரசபை அதிகாரிகளின் செயற்பாடு திருப்தி அளிக்கவில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மாநகரசபையில் பிரதம கணக்காளர் எஸ். சண்முகரத்தினம் மாநகரசபை அதிகாரிகளை அவமதிக்கும் விதத்தில் சபை உறுப்பினர் தெரிவித்த கருத்துக்களை வாபஸ் பெற வேண்டும் என்றும் இவ்வாறு செய்யாவிட்டால் தாம் வெளியேறப் போவதாகவும் தெரிவித்தார். சபை உறுப்பினருக்கும் கணக்காளருக்கும் இடையில் ஏற்பட விருந்த கருத்து மோதலை பிரதிமேயர் தடுத்து நிறுத்தினார்.

### சோலை வரி

கன்னாதிட்டிக் குளத்தடியில் அத்து மீறிக்குடியிருப்பவர்களிடம் சோலைவரி அறவிடுதல் தொடர்பாக உறுப்பினர் ம. மங்களநேசன் சபையின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

இங்குள்ள குடியிருப்பாளர்களுக்கு மின்சாரம் மற்றும் மலசலகூட வசதிகள் சபையினால் ஏற்படுத்தப்பட்டுள்ள அதேவேளை இவர்களிடமிருந்து ஏன் சோலை வரி அறவிடக்கூடாது என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த மாநகரசபையின் உதவி ஆணையாளர் இராசா தணிகாசலம் கூறியதாவது:-

இந்த மக்களுக்கு தகுந்த இடவசதி செய்து கொடுத்து அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துவதே சரியானது.

மனிதாபிமான ரீதியில் சில வசதிகள் செய்யப்பட்டுள்ளதை அவர்கள் அங்கு வசிப்பதற்கான உரிமை வழங்கப்பட்டதாக அங்கீகரிக்க முடியாது.

அவர்களுக்கு தொடர்ந்தும் மாநகரசபையினால் இந்த அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும். ஆனால் சோலைவரி வழங்குதல், அறவிடுதல் போன்ற உரிமை தொடர்பான விடயத்தில் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாது என்றும் கூறினார்.

யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரியின் செயற்பாடு தொடர்பாக சபையின் அனைத்து உறுப்பினர்களினாலும் விசனம் தெரிவிக்கப்பட்டது.

சபையின் சுகாதாரக் குழுவின் தலைவர் எஸ். சின்னத்துரை உட்பட பலரும் தமது ஆட்சேபனையை தெரிவித்தனர்.

சுகாதார வைத்திய அதிகாரியை சபையின் சுகாதாரக் குழுக் கூட்டங்களுக்கும் சபைக் கூட்டங்களுக்கும் சமுகமளிக்கச் செய்தல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

### நடைபாதை வியாபாரம்

யாழ். நகரப்பகுதியில் இடம்பெறும் நடைபாதை வியாபாரம் தொடர்பாகவும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடலின் இறுதியில் எந்தவிதமான முன்னறிவித்தலுமின்றி நடைபாதைக் கடைகள் அகற்றப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

மாநகரசபை உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் 1999 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த எஸ். கனேந்திரன், எஸ். சின்னத்துரை ஆகியோருக்கான 4 லட்சம் ரூபா நிதியும் இந்த ஆண்டு முடிவதற்கிடையில் குறிப்பிட்ட வேலைகளுக்கு செலவு செய்ய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இரண்டாயிரத்து ஒராம் ஆண்டுக்கான வேலைத் திட்டங்களின் விவரங்களை அடுத்தாண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று சகல உறுப்பினர்களுக்கும் பிரதிமேயர் அறிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் மூன்று புதிய உறுப்பினர்கள் அறிமுகம் செய்யப்பட்டனர்.

ஈ. பி. டி. பியைச் சேர்ந்த எஸ். துரைரட்ணம், புளொட் அமைப்பைச் சேர்ந்த மொகமட் பசிர், கந்தசாமி விக்கினேஸ்வரன் ஆகியோர் தமது அறிமுக உரைகளை நிகழ்த்தினர்.

கூட்டத்தில் சாவகச்சேரி நகரசபையின் தலைவர் பெனடிக்ற் தனபாலசிங்கம் பார்வையாளராக கலந்து கொண்டார். (இ-5)


## மரண அறிவித்தல்

### திருமதி காமினி சாந்தகுணநாதன்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி காமினி சாந்தகுணநாதன் 19-11-2000 (ஞாயிற்றுக்கிழமை) அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr. தர்மரட்ணம் மற்றும் திருமதி தர்மரட்ணம் (ஆஸ்திரேலியா) அவர்களின் அன்புப் புதல்வியும், உடுப்பிட்டியைச் சேர்ந்த பொறியியலாளர் இராசரத்தினம் சாந்தகுணநாதனின் அருமை மனைவியும், தர்சனின் பாசமிகு தாயாரும், திருமதி சாந்தகுணதேவி கணபதிப்பிள்ளை (உடுப்பிட்டி), திருமதி சற்குணதேவி கனகசிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமதி ரஞ்சினி, ரஞ்சித், சிவராஜா, திருமதி தர்சினி, ரவி, தர்சன், நரேன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றன.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
R. கணபதிப்பிள்ளை

''தேவிவாசம்''
உடுப்பிட்டி.

(80711)


## சத்தியசாயி பிறந்த தினவிழா

மானிப்பாய், நவ. 21

ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 75 ஆவது பிறந்த தின விழா மானிப்பாய் சத்தியசாயி நிலைய மண்டபத்தில் நாளை மறுதினம் வியாழன் பி. ப. 3. 15 மணி முதல் 5 30 மணி வரை நிலையத் தலைவர் இரா. வசந்தசேனன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார். (ஐ-90)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்தியசாயிபாபா சேவா நிலையத்தில் பாபாவின் 75 ஆவது பிறந்த தின நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 6-30 மணி முதல் இடம்பெறும்.

''கலியுக அவதாரம்'' ''கர்மா'' ஆகிய நூல்களின் வெளியீடும் மதிப்பீட்டுரையும் நடைபெறும்.

(ம-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 21

தாவடி ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் பாபாவின் 75 ஆவது பிறந்த தின நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை அதிகாலை 5-30 மணி முதல் நடைபெறும். (ம-30)

★ ★ ★

கொழும்புத்துறை, நவ. 21

கொக்குவில் ஸ்ரீசத்தியசாயி பாபா சேவா நிலையத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 3 மணி தொடக்கம் பாபாவின் 75 ஆவது ஜெயந்தி தின நிகழ்வுகள் நடைபெறும்.

இந் நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்ச்சிகள், பஜனை- கூட்டுப்பிரார்த்தனை, ஓம் காரம், காயத்திரிமந்திரம் என்பனவும் இடம்பெறும். (ம-30)

## தென்மராட்சி அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி, நவ. 21

தென்மராட்சி கல்வி லலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 1. 30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (உ-117)

## அடுத்த ஆண்டு பாடசாலைத் தவணைகள்

கொழும்பு, நவ. 21

அரசாங்கப் பாடசாலைகளின் அடுத்த ஆண்டுக்குரிய தவணைகள் ஆரம்பமாவது குறித்து கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முதலாம் தவணை ஜனவரி முதலாம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் 10 ஆம் திகதி வரையும் —

இரண்டாம் தவணை ஏப்ரல் 23ஆம் திகதி ஆரம்பமாகி ஒகஸ்ட் முதலாம் திகதிவரையும் —

மூன்றாம் தவணை ஒகஸ்ட் 28 ஆம் திகதி ஆரம்பமாகி நவம்பர் 29 ஆம் திகதிவரையும் — நடைபெறும்.

## வீடு சேதமடைந்தோருக்கான கொடுப்பனவில் ஒரு பகுதி இன்னும் வழங்கப்படவில்லை

வலி. வடக்கு, நவ. 21

யாழ். மாவட்டத்தில் வீடுகள் திருத்துவதற்கென வழங்கப்பட்ட கொடுப்பனவில் ஒரு பகுதி ஒரு வருடத்துக்கு மேலாகியும் இன்னும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

95 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வைத் தொடர்ந்து வீடுகள் சேதம் அடைந்தவர்களுக்கு வீடுகள் திருத்தவென இரு பிரிவுகளாக இந்த நிதியுதவி வழங்கப்பட்டது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாவும் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாவும் என இந்த நிதி கட்டம் கட்டமாக வழங்கப்பட்டது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு மூன்று கட்டங்களாக இப்பணம் வழங்கப்பட்டு வந்தது. எனினும் முதலாம் கட்டத்தைப் பெற்ற நிலையில் சிலரும் 2 ஆம் கட்டத்தைப் பெற்ற நிலையில் சிலரும் இன்னமும் மிகுதிப் பணத்தைப் பெறுவதற்காக கிராம அலுவலர் அலுவலகங்களுக்கும் பிரதேச செயலகங்களுக்கும் அலைந்து திரிகின்றனர்.

இவர்களில் ஒரு பகுதியினர் பண உறுதிச்சிட்டையில் கையொப்பமிட்ட போதிலும் கூட பணம் கிடைக்காது அலைகின்றனர். (ஐ-86)

## வேலணை தும்புத் தொழிற்சாலை பனை அபிவிருத்திச் சபையிடம்

நெடுந்தீவு, நவ. 21

வேலணையில் உள்ள பனந்தும்புத் தொழிற்சாலையை பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திடம் இருந்து பனம்பொருள் அபிவிருத்திச்சபை மீண்டும் கையேற்றுள்ளதாக மேற்படி சபையின் பொதுமுகாமையாளர் எஸ். கோகுலதாஸ் தெரிவித்தார்.

மூலதனம், ஆளணி என்பன பற்றாக்குறையினால் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பனந்தும்புத் தொழிற்சாலையைச் சரிவர இயக்கமுடியாத நிலை உள்ளதால் அதனைத் தற்காலிகமாக மீண்டும் கையேற்குமாறு கேட்டுக் கொண்டதற்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒருவருட காலம் வரை தொழிற்சாலையின் பொறுப்புக்கள் பனை அபிவிருத்திச் சபையிடம் இருக்கும்.

இதேவேளை பனந்தும்புக்கான மூலப் பொருளான பனம் மட்டைகளைப் பொது மக்கள் மேற்படி தொழிலகத்தில் கையளிக்கலாமெனவும் அதற்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-11)

## திருத்தம்

''யாழ். கூட்டுறவுத் துறையில் ஊழல்கள் எதுவும் கிடையாது-சமாசத் தலைவர் மறுக்கிறார்.'' — என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் பிரசுரமாகி இருந்த செய்தியில் 25 ஆயிரம் என்பது 25 சதவீதம் என்று தவறுதலாக இடம் பெற்று விட்டது.

சமாசம் கொள்வனவு செய்த எட்டு லொறி அடிச் சட்டங்களும் ஜி.எஸ்.ரி. வரி உட்பட தலா 11 லட்சத்து 41 ஆயிரத்து 875 ரூபா பெறுமதிவாய்ந்தவை. இதில் 25 ஆயிரம் ரூபா எமக்குக் கழிவு உண்டு — என்று திருத்தி வாசிக்கவும்.

(ஆ-ர்)

## தீட்சை வழங்கும் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 21

வடபிராந்திய இந்துப் பேரவையின் அனுசரணையுடன் அராலி அகாயக் குளம் விநாயகராலய திருப்பணிச் சபையும் இந்து மாமன்றமும் இணைந்து நடத்தும் விசேட சமய தீட்சை வழங்கும் நிகழ்வும் நாட்டில் மழை, சாந்தி, சமாதானம் வேண்டி நடைபெறும் பிரார்த்தனை நிகழ்ச்சியும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அகாயக்குளம் விநாயகராலயத்தில் நடைபெறும்.

(ம-30)

## தகாத உறவை மறைப்பதற்காக
# ஆசிரியையை அடித்துக் கொன்ற
# பெண்சாமியாருக்கு ஆயுட் சிறை!
## திருச்சி நீதிமன்றம் தீர்ப்பு

திருச்சி, நவ. 21
தமிழகத்தின் திருச்சியில் ஆசிரமம் நடத்தி வந்த பெண் சாமியார் ஜெயந்தி உட்பட கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட 5 பேருக்கு ஆயுள்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

திருச்சி கே.கே நகர் அருகே 9 வயதில் இறந்த தனது மகள் ஸ்ரீதேவி பெயரில் தேவி ஸ்ரீ தேவி மகா சன்னதி என்ற ஆசிரமத்தை நடத்தி வந்த 45 வயதான ஜெயந்தி என்ற பெண் சாமியார் அருள் வாக்கு அளிப்பது, பூசைகள் நடத்திக் கொடுப்பது போன்றவற்றை செய்து வந்தார். ஆசிரமத்துக்கு பக்தர்கள் வருகை அதிகமாகவே ஏராளமான பணமும் குவியத் தொடங்கியது. அதனால் பொன்னுபட்டி என்ற இடத்தில் 2 கோடி ரூபா செலவில் ஜெயந்தி ஒரு கோவிலையும் கட்டி வந்தார்.

ஆசிரமத்தை நிர்வகிக்க மனைவியைப் பிரிந்திருந்த 50 வயதான ஸ்ரீ புத்ரா என்பவரையும் தனது மகளுக்கு முன்னர் பாடம் கற்றுக் கொடுத்த 45 வயதான திருமணமாகாத ஆசிரியை லீலாவதியை கடிதப் போக்குவரத்துகளைப் பார்வையிடவும் பெண்சாமியார் நியமித்தார்.

இந்த நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் ஆசிரம முன்னாள் ஊழியர் ஒருவர் ஆசிரியை லீலாவதியை பெண் சாமியாரும் மற்றவர்களும் அடித்துக்கொன்று உடலை சுடுகாட்டில் எரித்து விட்டதாகப் பொலீஸில் முறையிட்டார். இது குறித்து பொலீஸார் மேற்கொண்ட விசாரணைகளில் பெண்சாமியார் ஜெயந்திக்கும் ஆசிரம நிர்வாகி ஸ்ரீபுத்ராவுக்கும் இடையே தகாத உறவு இருந்ததும் இதனை நேரடியாகப் பார்த்து விட்ட ஆசிரியை லீலாவதியை ஜெயந்தி, ஸ்ரீபுத்ரா ஆகியோர் அடித்துக்கொன்று பிணத்தை எரித்து விட்டதும் தெரிய வந்தன.

இதனை அடுத்து பெண் சாமியார் ஜெயந்தி, ஸ்ரீபுத்ரா மற்றும் ஆசிரம உதவியாளர்கள் உட்பட 5 பேர் மீது லீலாவதியைக் கொலை செய்து தடயங்களை மறைத்ததாகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்தனர்.

மேற்படி வழக்கின் மீதான தீர்ப்பில் குற்றஞ்சாட்டப்பட்ட 5 பேருக்கும் ஆயுள் தண்டனையும், 4 வருடம் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

தீர்ப்பு அறிவதற்காக பெருந் திரளான மக்கள் நீதிமன்றத்தில் திரண்டிருந்தனர். (ஓ-6)

## தாய்லாந்து அழகிப் போட்டியில் ஆணுக்கு இரண்டாம் பரிசு!

பாங்கொக், நவ. 21
தாய்லாந்தில் நடைபெற்ற அழகு ராணிப்போட்டியில் பெண் வேடமிட்டு வந்த ஆண் ஒருவருக்கு இரண்டாம் பரிசு வழங்கப்பட்டது.


கடந்தவாரம் உற்சவம் ஒன்றை ஒட்டி அழகு ராணிப் போட்டி நடத்தப்பட்டது. அப்போட்டியில் கலந்து கொண்ட ஒரு கட்டழகி பார்வையாளர்கள் அனைவரையும் கவர்ந்தாள்.

அவளுக்குத்தான் முதல் பரிசு என்று அனைவரும் நினைத்த போதிலும் நடுவர்கள் இரண்டாம் பரிசான 138 டொலர்களை அந்த அழகிக்கு வழங்கினார்கள்.

அழகிப்போட்டி நடந்து 5 தினங்கள் கடந்த பின்னர், போட்டியில் கலந்து கொண்டு பரிசு வெல்லாத யுவதிகள், இரண்டாம் பரிசைப் பெற்ற அழகி பெண்ணில்லை என்றும், கேசராபோன் என்ற ஆணே பெண் வேடமிட்டு அனைவரையும் ஏமாளிகளாக்கி பரிசைத் தட்டிச்சென்றதாகவும் ஆதாரத்துடன் பகிரங்கப்படுத்தினர்.

இதனை அடுத்து பெண் வேடமிட்டு அழகுராணிப் போட்டியில் கலந்து கொண்டதை ஒப்புக்கொண்ட கேசராபோன், தனது நண்பர்கள் மூலம் பரிசுத் தொகையை போட்டி அமைப்பாளர்களிடம் திருப்பிக் கொடுத்தார். (ஒ-8)

## இஸ்ரேலியர் மீதான தாக்குதலை நிறுத்துமாறு அரபாத் உத்தரவு



காஸா, நவ. 21
இஸ்ரேலியப் படையினர் மீதான துப்பாக்கிப் பிரயோகங்களை நிறுத்துமாறு பலஸ்தீனர்களுக்கு யசீர் அரபாத் உத்தரவிட்டுள்ளார்.

இது முழு அளவிலான மோதல் நிறுத்தமா அல்லது தாக்குதல் தணிப்பா என்பதில் சந்தேகம் உள்ளதாக இஸ்ரேலியத் தரப்பில் கூறப்படுகிறது.

கடந்த செப்ரெம்பர் 28 ஆம் திகதி முதல் மேற்குக் கரை மற்றும் காஸாப் பகுதியில் இஸ்ரேலியப் படையினருடன் மோதலில் ஈடுபட்டுவரும் பலஸ்தீனர்கள் தொடக்கத்தில் கற்களை வீசித் தாக்கி வந்தனர். சமீப காலமாக அவர்கள் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

அரபாத் தற்போது துப்பாக்கிப் பிரயோகங்களை நிறுத்துமாறு மட்டுமே கூறியிருக்கிறார். ஆகவே கல்வீச்சுத் தாக்குதல்கள் தொடருமா என்று சந்தேகம் எழுப்பப்படுகிறது.

இதே சமயம் இஸ்ரேலியப் பிரதமர் எகுட்பராக், வார்த்தைகள் மட்டும் போதுமானதல்ல செயலில் வேகம் தேவை எனத் தெரிவித்துள்ளார்.

அமைதிப் பேச்சுக்களை மீண்டும் தொடங்க விரோத மனப்பான்மை முடிவுக்குக்கொண்டு வரப்பட வேண்டும் எனவும் பராக் கூறியுள்ளார். (ஒ-8-6)

## திரிபுரா இனக்கலவரத்தில் 11 பழங்குடியினர் இறந்தனர்

புதுடில்லி, நவ. 21
இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் தீவிரவாதிகள் 7 பேரைக் கொன்றதையடுத்து ஏற்பட்டுள்ள இனக்கலவரத்தில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

இருநாள்களின் முன்னர் வடக்கு திரிபுராவில் கஞ்சன்புரா கிராமத்துக்குள் புகுந்த தடைசெய்யப்பட்ட திரிபுரா தேசிய விடுதலை முன்னணித் தீவிரவாதிகள் கண்மூடித்தனமாகச் சுட்டதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 7 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இறந்தவர்களும், காயமடைந்தவர்களும் பிற மாநிலங்களிலிருந்து திரிபுராவில் குடியேறிய திரிபுரா பழங்குடி இனத்தைச் சேராதவர்கள்.

இந்தக் கொலைகளுக்குப் பதிலடியாக பழங்குடியினர் வசித்து வந்த கிராமங்கள் தாக்கப்பட்டதில் 8 பழங்குடியினர் கொல்லப்பட்டனர்.

மேற்படி சம்பவங்களைத் தொடர்ந்து பழங்குடியினருக்கும், பிற மாநிலத்தவர்களுக்கும் இடையேயான இனக்கலவரம் மோசமான நிலையை எட்டியுள்ளது.

கலவரப் பகுதிகளுக்கு மேலதிக படைகள் அனுப்பப்பட்டு அதிக பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வீரப்பனைப் பிடிக்க மீண்டும் முயற்சி

சென்னை, நவ. 21
சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிப்பதற்கு காட்டுக்குள் அதிரடிப்படையினர் அனுப்பப்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தேவைப்பட்டால் மத்திய அரசிடமிருந்து ராணுவத்தின் உதவி கோரப்படும் என்று கூறியுள்ள கருணாநிதி தமிழக, கர்நாடக மாநிலங்களின் அதிரடிப்படையினர் வழமை பால் வீரப்பனுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஒ-8)

## பாகிஸ்தானில் சிவில் ஆட்சிக்கு வாய்ப்பில்லை

இஸ்லாமாபாத், நவ. 20
பாகிஸ்தானில் 2002 ஆம் ஆண்டுக்கு முன்னர் சிவில் ஆட்சி முறையை ஏற்படுத்துவது இயலாத காரியம் என்று இராணுவ அரசு தெரிவித்துள்ளது.

## காஷ்மீரில் றம்ழானை முன்னிட்டு ராணுவ நடவடிக்கை நிறுத்தம்
### பிரதமர் வாஜ்பாய் அறிவிப்பு

புதுடில்லி, நவ. 21
இந்த மாத இறுதியில் தொடங்கவுள்ள றம்ழான் நோன்பை முன்னிட்டுக் காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கெதிரான அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் இந்திய அரசு தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

புதுடில்லியில் இதற்கான அறிவிப்பை வெளியிட்டு உரையாற்றிய பிரதமர் வாஜ்பாய் இத்தகைய நல்லெண்ண நடவடிக்கையை முழுமையாகப் பயன்படுத்தி காஷ்மீர் மாநிலத்தில் சகல வன்முறைகளும், ஊடுருவல்களும் நிறுத்தப்பட்டு அமைதி ஏற்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

றம்ழான் பண்டிகையின் போது நல்லெண்ணங்களைக் கடைப்பிடித்து அமைதியாக வாழவேண்டும் என்று நபிகள் நாயகம் வலியுறுத்தியுள்ளதைக் குறிப்பிட்ட பிரதமர் வாஜ்பாய் தற்காலிக இராணுவ நடவடிக்கை நிறுத்தம் குறித்து அறிவிக்க முன்னதாகக் காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லாவுடன் கலந்தாலோசித்ததாகத் தெரிவித்தார்.



அரசின் முடிவைக் காஷ்மீரின் அரசியற் கட்சிகள் அனைத்தும் வரவேற்றுள்ளன. தீவிரவாத அமைப்புகள் சாதகமான முடிவை எடுக்கும் என்று அரசு நம்புவதாகக் கூறப்படுகிறது. (ஒ-8-6)

## புலிகளுடன் தொடர்பில்லை என்கிறார் டாக்டர் பானு

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனிடம் பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த நடிகர் ராஜ்குமாருக்கு காட்டுக்குள் வைத்திய உதவிகளை வழங்கிய டாக்டர் பானு விடுதலைப்புலிகளுக்கும் தனக்கும் தொடர்பிருப்பதாகக் கூறப்படுவதை மறுத்துள்ளார்.

டாக்டர் பானுவுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பிருப்பதாகவும் — அதனாலேயே வீரப்பன் வசமிருந்த ராஜ்குமாருக்கு அவர் சிகிச்சையளிக்க அழைக்கப்பட்டதாகவும் — தமிழக, கர்நாடகப் பத்திரிகைகள் சில செய்தி வெளியிட்டிருந்தன.

இந்தச் செய்திகளை மறுத்துள்ள டாக்டர் பானு, தன் மீது இப்படியான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருப்பது குறித்து வருத்தமடைவதாகவும், இது நாள் வரை ஒரு வைத்தியராக மட்டுமே சேவை செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழக, கர்நாடக மாநிலங்களின் எல்லையில் உள்ள கருங்கல் தொழிற்சாலை ஒன்றின் உரிமையாளரின் மனைவியான டாக்டர் பானு தனது விடுதலையில் முக்கிய பங்காற்றினார் என்று நடிகர் ராஜ்குமார் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

## சிலியில் நடந்த புரட்சிக்கு அமெரிக்க அரசு நிதியுதவி
### சி.ஐ.ஏ அறிக்கையில் தகவல்

தென் அமெரிக்க நாடான சிலியில் இடம்பெற்ற சதிப் புரட்சிக்கு அமெரிக்க அரசு உதவியளித்ததாக அமெரிக்க புலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏ. தெரிவித்துள்ளது.

சிலியில் ராணுவ ஆட்சி நடந்த காலப் பகுதியிலும் அதற்கு முந்தைய வருடங்களிலும் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான 16 ஆயிரம் ரகசிய ஆவணங்கள் அடங்கிய சி.ஐ. ஏயின் அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலியில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிச சிந்தனையுள்ள ஜனாதிபதி சல்வடோ அலன்டேயின் ஆட்சி 1973 ஆம் ஆண்டு சதிப்புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்டது.

இந்தப் புரட்சிக்கு அமெரிக்கா நிதியுதவி அளித்து, ஆட்சியைக் கவிழ்க்க உதவியதாக சி.ஐ ஏ. தனது அறிக்கையில் கூறியுள்ளது.

அத்துடன் ராணுவ ஆட்சியின் போது சிலியில நிகழ்ந்த மனித உரிமை மீறல்களையும் அது வெளியிட்டுள்ளது.

ஆட்சிக் கவிழ்ப்புக்கு உதவியதாகக் கூறப்படுவதை அமெரிக்க அரசு உத்தியோகபூர்வமாக மறுத்துள்ளது (ஒ-8)

## புலிகள் மீதான அனுதாபம் இப்போது கிடையாதாம்
### முதல்வர் கருணாநிதி கூறுகிறார்



சென்னை, நவ. 21
விடுதலைப் புலிகள் மீதான அனுதாபம் தமிழகத்தில் இப்போது கிடையாது என்று தமிழக முதல்வர் கருணாநிதி கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபால்சாமி கோரி வருவது குறித்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே கருணாநிதி இவ்வாறு கூறினார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் பத்மநாபா ஆகியோரின் கொலைகளுக்குப் பின்னர் தமிழ்நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான அனுதாபம் அறவே நீங்கிவிட்டதாகத் தனது பதிலில் கூறிய முதல்வர் கருணாநிதி, இருப்பினும் ஈழத்தமிழர்களின் கஷ்டங்கள் பற்றிக் கவலைப்படாமல் இருக்க முடியாது என்று தெரிவித்தார். (ஒ-8-6)

## கண்ணீர் அஞ்சலி

யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய ஆசிரியை
திருமதி த. கதிர்காமநாதன் அவர்களின் தாயார்

### அப்புத்துரை வள்ளியம்மை

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்

(80718)

## 10 ஆம் ஆண்டு நினைவு தினம்

### செல்வி சின்னத்தம்பி நாகேஸ்வரி

மலர்வு: 12.03.1956 உதிர்வு: 21.11.1990

எமைவிட்டு விண்ணுலகம் சென்ற எம் அன்புத் தங்கையை இன்றும் மறவாமல் நினைவு கூருகின்றோம். உனது உயர்ந்த இலட்சியப் பாதையை நாமும் தொடர்வோம்.

நினைவு கூரும்
மாவை சிவாவும், உறவினர்களும்,
நண்பர்களும்.

தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

(80456)

## இதய அஞ்சலி

எமது தாதிய பயிற்சிப் பாடசாலை அதிபர்
செல்வி பரமேஸ்வரி வீரகத்திப்பிள்ளை
அவர்களின் தந்தையார்

### கணபதி வீரகத்திப்பிள்ளை

அவர்களின் மறைவைக் கேட்டுக் கவலை கொள்ளும் நாம் அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகஸ்தர்
87, 88 (Batch)
யாழ். போதனா வைத்தியசாலை.

(80716)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கிராமத்தவரும் எமது சனசமூக நிலைய வளர்ச்சியில் தீவிர பங்கு கொண்டவருமாகிய பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர்.

### திருமிகு சின்னையா நடராஜலிங்கம்

இலங்கை வங்கி யாழ். பிராந்திய முகாமையாளராக (Area Manager) பதவியுயர்வு பெற்றமையினை மிக்க மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

குரும்பைகட்டி சனசமூக நிலையத்தினரும்,
ஊர் மக்களும்,
றோயல் கல்வி நிலையத்தினரும்,
உதய சூரியன் விளையாட்டுக் கழகத்தினரும்.

(80717)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திருமிகு அ. மு. அருணாசலம்

தளராத சேவையினால் தரம் 1 க்கு உயர்ந்திட்ட
எம் அதிபர் அருணாசலம்
நிலையான எம் அன்னை மெமோறியலின்
நிறைவான புகழுக்கு வளம் சேர்த்து
வாழ்க பல்லாண்டு வாழிய என
வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய நல்லுறவு மன்றம்
யா/ மானிப்பாய் மெமோறியல்
ஆங்கிலப் பாடசாலை.

(80713)

# இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து விளைபொருள்களைத் தென்பகுதிக்கு எடுத்துவர அனுமதிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 21

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் சந்தைப்படுத்த முடியாது பெருமளவில் தேங்கிக் கிடக்கும் நெல், கச்சான், கருவாடு போன்ற பொருள்களைத் தென்னிலங்கைக்கு எடுத்து வருவதற்கு அனுமதிக்கும்படி ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் தி மகேஸ்வரன் வவுனியா இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் கோரி உள்ளார்.

இது தொடர்பாகக் கடிதம் ஒன்றையும் அவர் கட்டளைத் தளபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

விரைவில் இது குறித்துப் பரிசீலித்துச் சாதகமான பதில் ஒன்றைத் தருவதாகவும்—

பொருள்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எடுத்து வருவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும்—

மேஜர் ஜெனரல் பொன்சேகா தம்மிடம் தெரிவித்துள்ளதாக தி. மகேஸ்வரன் கூறினார்.

(ம)

## வலது குறைந்தோர் தினப் போட்டிகள்

கொழும்புத்துறை, நவ. 21

சர்வதேச வலது குறைந்தோர் தினம் அடுத்த மாதம் 4 ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளதை முன்னிட்டு யாழ். பிரதேச செயலர் பிரிவு மாணவர்களுக்கிடையிலான கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடத்த உள்ளது.

போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் ''உடற் குறைபாடுகள் வாழ்க்கைக்குத் தடையல்ல'' என்ற தலைப்பில் கட்டுரை அல்லது கவிதையை எழுதி பாடசாலை அதிபர் மூலமாக அவரின் அத்தாட்சியுடன் யாழ். பிரதேச செயலகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும் என பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார். ஆக்கங்கள் அனைத்தும் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படவேண்டும்.

(ம 8-30)

## முன்னாள் பிரதமர் மறைவுக்கு இரங்கல் கடிதம்

வட்டுக்கோட்டை, நவ. 21

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் மறைவு குறித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகா குமாரதுங்கவுக்கு வட்டுக்கோட்டையில் இயங்கி வரும் சமூகஜனநாயக மன்றம் இரங்கல் தெரிவித்துக் கடிதம் அனுப்பியுள்ளது.

அணிசேரா நாடுகளில் இலங்கை முதன்மை பெறவும், விவசாயத்துறை மேன்மை பெறவும் மறைந்த முன்னாள் பிரதமர் சிறிய பங்காற்றியுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தை நிறுவியதற்கும், யாழ் விவசாயிகள் முன்னேறவும் மறைந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயகா ஆற்றிய பணிகள் பெருமைக்குரியவை. அவரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ ஓ)

## மருத்துவபீடத்துக்கு ஒருவர் தெரிவு

யாழ் பல்கலைக்கழக மருத்துவத்துறைக்கு வெற்றிடம் நிரப்புப் பட்டியல் மூலம் மாணவி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எம். ஜெனிற்றா குலநாயகி என்ற மாணவியே மருத்துவபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவராவார்.

அளவையியல்
K. T. மோகன்
2001 பகுதி II
ஆரம்பம்: 23.11 2000
வியாழன் 6 00-7.00 A M
பகுதி - I பெறுகைமுறை
சனி, ஞாயிறு 7 30-8 30
ஆரம்பமாகிவிட்டது
2002 பகுதி - I
நியாயத்தொடை
ஆரம்பம்: 25 11 2000
சனி 6.30 A. M.
அறிவகம் கல்வி நிலையம்
அச்சுவேலி.

(80719)

## மனமார வாழ்த்துகின்றோம்

எமது பன்னாலை மயிலையம்பதி ஞானவைரவர் ஆலய திருப்பணிச் சபையின் உபதலைவரான

உயர்திரு.

### அம்பலப்பிள்ளை இலங்கைநாயகம்

அவர்கள் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதை நினைவு கூர்ந்து அவரின் சமூகப்பணி சிறப்புடன் தொடர ஞானவைரவரின் இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

திருப்பணிச்சபை

மயிலையம்பதி,
பன்னாலை.

(80724)

உரும்பிராய்

## ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி பொதுச்சபைக் கூட்டம் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. இ. நடராசா அவர்கள் தலைமையில் ஆலய மண்டபத்தில் எதிர்வரும் 03-12-2000 ஞாயிறு மு. ப. 10. 00 மணிக்கு நடைபெற உள்ளமையை உபயகாரர்கள், உறுப்பினர்களுக்கு அறியத் தருகின்றோம்.

கணக்கு அறிக்கை காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும். பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 24-11-2000 க்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்

இ. நடராசா
கௌரவ தலைவர்

ந. கணேசலிங்கம்.
கௌரவ செயலாளர்

(80720)

## கண்ணீர்க் காணிக்கை

எமது தாதியர் பயிற்சிப் பாடசாலை அதிபர்
செல்வி பரமேஸ்வரி வீரகத்திப்பிள்ளை
அவர்களின் தந்தையார்

### அமரர் கணபதி வீரகத்திப்பிள்ளை

அவர்கள் 19—11—2000 அன்று மறைந்த செய்தி கேட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

தாதி உத்தியோகத்தர்
நலன்புரிச் சங்கம்,
யாழ். போதனா வைத்தியசாலை

(80715)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய சூழலில் வசித்தவரும்
ஆலய ஆஸ்தான வித்துவானாக விளங்கியவருமாகிய
நாதஸ்வர வித்துவான்

### கணேசரத்தினம் பாலச்சந்திரன்

(பெரிய கணேசு சந்திரன்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அளவெட்டி வடக்கு
தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய
பரிபாலன சபையினர்.

தவளக்கிரி, அளவெட்டி.

(80723)

# உதயன்

## சரியான அறிவுரை

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசியது குறித்தும் —

அந்தப் பேச்சு ஏன் இரகசியமாக நடத்தப்பட்டது என்பது குறித்தும் —

தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்கு அரசாங்கமே தெளிவுபடுத்த வேண்டும்.

இந்தச் சமாதான முயற்சி தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் குழப்பான நிலை நிலவுகிறது. அது நீடிக்குமாயின் இனங்களுக்கு இடையேயான கலவரத்துக்கு—இனக்கலவரத்துக்கு — ஆதாரமாகிவிடும்.

இவ்வாறு கருத்துக் கூறியும் எச்சரித்தும் இருப்பவர் இலங்கைக்கான ஆஸ்திரேலிய நாட்டுப் பிரதித் தூதுவர் திருமதி ஹெதரின் ஹெத்மன்.

நோர்வேத் தூதரகத்தைமூட வேண்டும். சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இங்கு வந்தால் அவரைக்கைது செய்து நாடு கடத்த வேண்டும். நோர்வேயின் சமாதான முயற்சியை ஆதரிப்பதாகக் கூறிய பிரிட்டிஷ் வெளிவிவகார (ராஜாங்க) அமைச்சர் பீற்றர் ஹெய்னின் வருகையையும் எதிர்ப்போம் — தென்னிலங்கையின் பேரினவாதத்துக்கு இப்போது தலைமை வகிக்கும் சிஹல உறுமய இவ்வாறெல்லாம் ''குரல் கொடுத்து'' வருகிறது.

எந்த வல்லரசாக இருந்தாலும் இலங்கையின் இனவிவகாரத்தில் தலையிட்டால் அதனை நாம் எதிர்ப்போம்; இடம் கொடுக்கமாட்டோம் என்றும் சிஹல உறுமய கூறியுள்ளது.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை — அவர்களுக்குரிய உரிமைகளை — வழங்குவதற்கு சிங்கள — பௌத்த பேரினவாதம் எவருக்கும் இடம் கொடுக்கமாட்டாது என்பதற்கான சமிக்ஞைகள் இவை.

கடந்த காலங்களிலும் தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளைத் தடுத்தவர்கள் அந்தந்தக் காலத்து பேரினவாதத் தலைவர்களே. அரசியல் தலைவர்களும் அவர்களுக்குப் பயந்து, பணிந்து செயலாற்ற வேண்டிய கட்டாயம்; நிர்ப்பந்தம். பேரினவாதத்தை மீறிச் செயற்படும் துணிவும் அவர்களுக்கு இல்லை.

நவீன மாற்றங்களால் தேசங்கள் மிக நெருங்கி வருகின்றன. எந்தப் பெரிய வல்லரசுக்கும் ஏனைய நாடுகளின் உதவிகள் ஏதோ ஒரு வகையில் தேவைப்படுகின்றன. நாடுகள் ஒன்றுக்கு மற்றது தொடர்புற வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

ஆனால் தெற்கின் பேரினவாதிகளும் அப்பிரதேச மக்களில் பெரும்பாலானோரும் ''உலகம்அறியாதவர்களாக'', கிணற்றுத் தவளைகளாக இருக்க முனைகிறார்கள்; அல்லது தெரியாதவர்களாக நடிக்க முயல்கிறார்கள். தாம் பெரும்பான்மை இனத்தவர்கள் என்பதால் சிறுபான்மை மக்களை அடக்கிஒடுக்கி விடலாம் என்ற காட்டுஆட்சிக் காலத்தில் சஞ்சரிக்கிறார்கள்.

தமிழர்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதனை அவர்களுக்கு விளங்க வைக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. அதனை முதலில் செய்தாலேயே சொல்ஹெய்ம் — பிரபாகரன் சந்திப்புக்குறித்து அதனால் விளக்க முடியும். ஆஸ்திரேலியப் பிரதித் தூதுவரின் சரியான அறிவுரையை ஏற்று அரசு செயற்பாட்டால் சமாதானத்துக்கான தடை நீங்க வழி பிறக்கும்.

# விந்துனுவெவச் சம்பவம், நிமலராஜன் கொலை

# இரண்டு குறித்தும் பூரண விசாரணை நடத்துக!

## யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ. 21

பண்டாரவளை விந்துனுவெவ தடுப்பு முகாமில் இடம்பெற்ற தமிழ்க் கைதிகளின் படுகொலைகள் மற்றும் பத்திரிகையாளர் ம. நிமலராஜனின் படுகொலை என்பன தொடர்பாகப் பூரண விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

நேற்று நடைபெற்ற யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் இந்தக் கொலைகளைக் கண்டித்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களிலேயே மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஒத்திவைக்கப்பட்ட மாநகர சபைக் கூட்டம் யாழ். ஸ்ரான்லி வீதி ஒழுங்கையில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையகத்தில் நேற்றுத் தொடர்ந்து நடைபெற்றது.

பிரதி மேயர் என். ரவிராஜ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சபை உறுப்பினர் எஸ். ஆவிந்தன் பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலையைக் கண்டிக்கும் தீர்மானத்தைச் சமர்ப்பித்தார்.

நிமலராஜன் படுகொலை இடம்பெற்று ஒருமாதகாலமாகியும் கொலைக்குக் காரணமான சூத்திரதாரிகளை அரசு கண்டு பிடித்துக் கைது செய்யாமல் இருப்பதற்கு அந்தத் தீர்மானம் கடும் ஆட்சேபனையும் கண்டனமும் தெரிவித்தது.

கூட்டணி உறுப்பினர் எஸ். கனேந்திரன் பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானத்தைச் சபையில் சமர்ப்பித்தார்.

இப் படுகொலைகளுடன் தொடர்புடையவர்களை உடன் கண்டுபிடிப்பதற்கான துரித நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும் என்றும்—

தென்பகுதிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க்கைதிகளை அவர்களுக்குப்பாதுகாப்பான இடம் எனக் கருதப்படும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள சிறைகளுக்கு இடம் மாற்றம் செய்யவேண்டும் என்றும்—

அவர்களுடைய வழக்குகளைத் துரிதமாக நடத்தி முடித்து குற்றமற்றவர்களை எந்தவித நிபந்தனைகளும் இன்றி விடுவிக்க வேண்டும் என்றும்—

இந்தத் தீர்மானங்களுக்கு ஆதரவாக புளொட் உறுப்பினர் மு. தவநாதன், ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர் ம. மங்களநேசன், பிரதிமேயர் என். ரவிராஜ், தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர் எஸ். சின்னத்துரை ஆகியோர் உரையாற்றினர்.

தீர்மானங்களின் பிரதிகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் வெளிநாட்டுத் தூதரகங்கள், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் போன்றவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

நிமலராஜனின் கொலை தொடர்பான கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து உரையாற்றிய ம. மங்களநேசன், மு. தவநாதன் ஆகியோர் நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதியத்தினை 'உதயன்' பத்திரிகை நிறுவனம் ஆரம்பித்துச் செயற்படுத்தி வருவதற்குத் தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர். உதயனின் நிமலராஜன் குடும்ப நலன்காக்கும் நிதியத்துக்கு ஏனைய உறுப்பினர்களும் ஆதரவான கருத்துக்களை வெளியிட்டனர். (உ-5-173)

## குழாய் நீரைப் பயன்படுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 21

நீர் விநியோகக்குழாய் சுத்திகரிப்பு வேலைகள் பூர்த்தி அடைந்து விட்டன என்றும் பாவனையாளர்கள் குழாய் நீரைப் பயன்படுத்த முடியும் என்றும் யாழ். மாநகர உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஆகவே இன்று முதல் முதலாம், 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம் குறுக்குத்தெருக்களிலும்—

கொட்டடி, நாவாந்துறை, கற்குளம், அண்ணாபுரம். தேவாலய வீதி, கல்லூரி வீதி காரைநகர் வீதி, கென்னடி வீதி, வில்லூன்றிப் பிள்ளையார் வீதி ஆகிய இடங்களிலும் — உள்ள தண்ணீர்க் குழாய்களில் விநியோகிக்கப்படும் குடிதண்ணீரை பொது மக்கள் பயன்படுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## விஞ்ஞானக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க தூய விஞ்ஞான பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கார்த்திகை மாதக் கருத்தரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதிகத்துறை மண்டபத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக இரசாயனத் துறை விரிவுரையாளர் கலாநிதி செ. மீனா ''ஏகவினமான ஊக்கலில் புதிய அணுகுமுறைகள்'' என்னும் பொருள் பற்றிக் கருத்துரை வழங்குவார். (உ)

## வீடியோ நாடா அனுப்புவது இடைநிறுத்தம்

யாழ். பிரதம தபாலகம் ஊடாக உள்ளூர் மற்றும் வெளியூர்களுக்கு வீடியோ நாடா அனுப்பும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ் பிரதம தபால் அதிபர் சி. மார்க்கண்டன் தெரிவித்தார்.

கடந்த வாரம் கிடைத்துள்ள முந்நூறு வீடியோ நாடாக்களைப் பரிசோதனை செய்யும் பணி யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் தற்சமயம் இடம்பெறுகின்றது என்றும் —

அந்தப்பணி முடிவடைந்த பின்பே புதிதாக வீடியோ நாடாக்கள் பொறுப்பேற்கப்படும் என்றும் — அவர் சொன்னார். (உ-3)

## தொழில் நுட்ப மாணவன காங்கேசனில்

மந்துவில் பகுதியில் வைத்து கடந்த 4 ஆம் திகதி கைது செய்யப்பட்ட யாழ். தொழில் நுட்பக்கல்லூரி பகல் முழு நேர பயிற்சி நெறி மாணவன் இராசையா சிறீரங்கநாதன் காங்கேசன்துறைத் தடுப்பு முகாமில் உள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்துக்கு யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

அதேதினம் அந்தப் பகுதியில் கைது செய்யப்பட்ட மற்றுமொருவருமான கணபதி பொன்னம்பலம் (வயது 45) என்பவரும் காங்கேசன்துறைத் தடுப்பு முகாமில் உள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-5-6)

## அதிகாரி காங்கேசனுக்கு

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அதிகாரி சட்டத்தரணி என் ஜிவேஸ்வரா காங்கேசனதுறை தடுப்பு முகாமுக்கு நாளை புதன்கிழமை செல்லவுள்ளார். (உ-6-5)

# டெங்குக் காய்ச்சல் குறித்து மக்களுக்கு அறிவுறுத்தல்

## யாழ்ப்பாணத்திலும் பரவும் ஆபத்து

இலங்கையின் தென்பகுதியில் டெங்குக் காய்ச்சல் பரவி வருகின்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் டெங்குக் காய்ச்சல் பரவ வாய்ப்பு அதிகம் உண்டு. டெங்குக்காய்ச்சலைப் பரப்பும் 'ஈடீஸ் இஜிப்ரை' எனப்படும் நுளம்பு இங்கும் உண்டு.

எங்கே நீர் தேங்கி நிற்கின்றதோ, அங்கே இந்த நுளம்புகள் உற்பத்தியாகிப் பெருக வாய்ப்பு அதிகம் உண்டு ஏனைய நுளம்புகளால் பரவும் நோய்களான மலேரியா மற்றும் மூளைக்காய்ச்சலும் பரவ வாய்ப்புண்டு.

தற்போதைய சூழ்நிலையில் மக்கள் இடம்பெயர்ந்து இருப்பதனால் அவர்களின் வெற்றுக்காணிகளில் பற்றைக் காடுகள், புல் பூண்டுகள் செடி கொடிகள், முள் மரங்கள் பெருமளவில் வளர்ந்துள்ளன. மேலும் பழைய தகரங்கள், சிரட்டைகள், கோம்பைகள், போத்தல்கள், நீரேந்தும் பீலிகள், நீர்த்தாங்கிகள், பழைய ரயர்கள், அலுமினியப் பாத்திரங்கள் மற்றும் தடைப்பட்ட வடிகால்களில் நீர் தேங்கியிருப்பதால் நுளம்புப் பெருக்கம் பெரிதும் காணப்படுகின்றது. அத்துடன் விஷப்பாம்புகளும் பெருகிவருகின்றன.

ஆகவே, பொது மக்கள் என்ன செய்யவேண்டும்? மாநகர சபை என்ன செய்ய வேண்டும்?

பொது மக்கள் தம்மால் முடிந்த அளவு இந்தப்பற்றைக் காடுகளை வெட்டி— வசதியிருந்தால் எரிக்கலாம். நீரேந்தும் கொள்கலன்களைஉடைத்து வெட்டிப் புதைக்கலாம்

> தற்பொழுது தென்னிலங்கையில் வேகமாகப் பரவி வரும் டெங்குக் காய்ச்சலினால் சுமார் 40 பேர் வரை உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் மருத்துவபீட மாணவனும் ஒருவர். இந்த டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு இனங்கள் யாழ்ப்பாணத்திலும் இருப்பதால் யாழ்ப்பாணத்திலும் இந்தக் காய்ச்சல் பரவும் ஆபத்து இருந்து வருகிறது.
>
> யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு இங்கு பிரசுரமாகி உள்ளது.

பொது மக்களால் முடியாவிட்டால் மாநகரசபையின் உதவியை நாடலாம். உரிமையாளர் ஊரில் இல்லாத காணிகளை அதில் வளர்ந்துள்ள காடுகளை வெட்ட உதவலாம்.

யாழ்ப்பாண மாநகரசபையைப் பொறுத்தவரை வாகன வசதி குறைவாகவே உள்ளது. ஆகவே, உங்கள் வளவுகளில் சேரும் குப்பைகளை செடிகளை, வாழைக்குற்றிகளை கூடியளவு உங்கள் வளவிலேயே புதைத்து ஒத்துழையுங்கள். இந்த மாநகரத்தை அழகானசுத்தமான நகரமாக வைத்திருப்பதற்கு மாறாக வீதிகளில் குப்பைகளைக் குவிக்காதீர்கள். உங்கள் வளவுகளில் வசதியில்லாவிடில் உங்கள் வளவுக் குப்பைகளைப் பொதிசெய்து கை வண்டில் வரும் நேரத்தை உங்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் அறிந்து அந்தக் கைவண்டில் வரும் நேரத்தில் குப்பைப் பொதிகளைக் கையளித்து இந்த நகரத்தை அழகாக வைத்திருங்கள். தொற்றுநோய்கள் பரவாதிருக்கவும், ஈ பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவும் உதவுங்கள்.

நுளம்பினால் பரவும் டெங்குக் காய்ச்சல், மலேரியா, மூளைக்காய்ச்சல் ஆகியவை பெருகும் அபாயத்திலிருந்து எமது மக்கள் பாதுகாக்கப்படவேண்டும். இப் பணியில் எம்முடன் இணைந்து சகல தரப்பினரும் உதவுங்கள். (இ-8)

### உதயவாக்கு

திங்கிழைப்பதைவிடத் துன்பம் நுகர்வது நல்லதாகும். அதிகம் துயரை நுகர்ந்தவன் அதிகம் அறிவான்.

-ஹோமர்

### நாளை

கார்த்திகை 7

புதன்கிழமை

திதி: ஏகாதசி

காலை 06 11 வரை

துவாதசி வைகறை

5. 12 வரை

நட்சத்திரம்: அத்தம்

பி. ப. 3 . 50 வரை

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 04 41 06 . 12

ராகுகாலம் 12 11 1 41

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சின்னஞ் சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

யாழ்நகர், கன்னாதிட்டி ஒழுங்கையில் கிணற்றுடன் கூடிய 1 1/2 பரப்புக காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- 12/41, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (80684)

### CAR FOR SALE

**Peugeot 504 GL-9 Sri for sale. Topping condition. Contact: Rasa Vamadevan, 180, Point Pedro Road, Jaffna. T.P:3239. (80668)**

### விற்பனைக்கு

**YAMAHA MATE** 50 பழைய மொடல் மோட்டார்சைக்கிள், 12 **H.P, CHAINA** லாண்ட் மாஸ்டர் மொடல் என்ஜின் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 109, சட்டநாதர் வீதி, நல்லூர். (80708)

### தவறிவிட்டது

யேசுதாஸன் அஜித் ஜீவராஜ் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 0901031644) 08.11.2000 அன்று ஜொய்சி பேக்கரி (கோவில் வீதி, யாழ்)க்கும் **I.C.R.C.** சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஜொய்சி பேக்கரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (80493)

### நாய்க்குட்டிகள் விற்பனை

நல்ல இன **ALSATION** நாய்க் குட்டிகள் (கறுப்புக் குட்டிகள் உட்பட) விற்பனைக்குண்டு தொடர்பு: தன பாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (80709)

## 4 அமைச்சர்களிடம் விளக்கம் கோரப்பட்டது

கொழும்பு,நவ.21

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது வன்முறைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 4 அமைச்சர்கள் மற்றும் 15 பிரதி அமைச்சர்கள் உட்பட 54 பேரிடம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் விசாரணைக் குழுவினர் விளக்கம் கேட்டுள்ளனர்.

தேர்தல் வன்முறைகள் தொடர்பாக விசாரணைகளை நடத்த என பொதுமக்கள் ஐக்கிய முன்னணியால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினர் நடத்திய விசாரணைகளின் போது குற்றம் சுமத்தப்பட்டவர்களிடமே மேற்படி விளக்கம் கோரப்பட்டுள்ளது. (ம-6)

## வல்வையில் எம்.எஸ்.எவ். மருத்துவச் சேவை

நெல்லியடி,நவ.21

வல்வெட்டித்துறை மாவட்ட ஆஸ்பத்திரியில் பிரெஞ்சு மருத்துவக் குழுவான எம்.எஸ்.எவ்வின் விசேட மருத்துவ சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மந்திகை ஆஸ்பத்திரியில் பணிபுரியும் இக்குழுவினரால், சத்திரசிகிச்சை ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும், கர்ப்பிணிகள் சிகிச்சையும், பெண் நோயியல் சிகிச்சையும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 10 மணிக்கு இடம்பெறும் என, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.மயிலேறும் பெருமாள் தெரிவித்துள்ளார். (இ-8-109)

## நிர்வாக அலுவலக கட்டடம் அமைப்பு

சண்டிலிப்பாய்,நவ.21

சங்கானை அரசினர் வைத்திய சாலையில் நிர்வாக அலுவலகக் கட்டடம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

வடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை (றாண்) இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. (ம-135)

## யாழ்ப்பாணத்து சுவாமிகள் குருபூசை தினம்

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் குருபூசை தினம் நாளை புதன்கிழமை வியாபாரி மூலையில் உள்ள அவரது சமாதிக் கோயிலில் நடைபெறும். (ம)

## நல்வாழ்த்துக்கள்



சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வாழ்விடமாகவும் கொண்ட, கொழும்பு சங்கரத்தை அபிவிருத்திச் சபையின் ஸ்தாபகரும், தற்போதைய போஷகருமான

### திரு. சதாசிவம் வீரவாகு

அண்மையில் கொழும்பு மாவட்ட சமாதான நீதவானாக நியமனம் பெற்றமையை முன்னிட்டு எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

*'மக்கள் சேவையே மகேசன் சேவை'*

**முருகமூர்த்தி கோயில் பரிபாலன சபை,**
**பவளவிழா மாண்புறும் இந்து வாலிபர் சங்கம்,**
**மாதர் அபிவிருத்திச் சங்கம்,**
**கிராம அபிவிருத்திச் சங்கம்,**
**சனசமூகநிலையம்.**

*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.*

(C/13912)

## நீங்கா நினைவில் 45 ஆம் நாள்

| தாயவள் பூரிக்க | தாரமவள் பரிதவிக்க |
|---|---|
| 30 - 01 - 1948 | 08 - 10 - 2000 |



### அமரர் கந்தசாமி இராமநாதன்

(முன்னாள் உரிமையாளர் - கந்தசாமி அன் சன்ஸ் நகைக்கடை)

கண்ணை இமை காப்பது போல எமையெல்லாம் காத்து, காலனவனின் கொடிய காரியத்தால் எமைப்பிரிந்த எமது குடும்பத் தலைவனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து எமை ஆற்றுவதற்காக ஆறுதல் தந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது அன்பு கனிந்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
க.சிவகுருநாதன்,
33, 1ஆம் குறுக்குதெரு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

**மனைவி,**
**பிள்ளைகள்,**
**உறவினர்கள்.**

(80706)

## ஆறாம் மாத நினைவஞ்சலி

| ஜனனம் | அஸ்தமனம் |
|---|---|
| 05 - 05 - 1951 | 21 - 05 - 2000 |
| (உரும்பிராயில்) | (ஜேர்மனியில்) |



### அமரர் சுப்பிரமணியம் குகதாஸ்

**அம்மா என்று அழைக்கும் குரலை இனி கேட்கவே முடியாதா என்று உன் அம்மாவும்; அப்பா என்றழைக்க அப்பா இல்லையே என்று உன் மக்களும் மனைவியும்; அண்ணா, பெரியண்ணா என்றழைக்க அண்ணா இல்லையே என்று உன் தம்பியும் தங்கையும்; பெரியப்பா என்றழைக்க பெரியப்பா இல்லையே என்று பெறாமக்களும்; பெரியமாமா என்றழைக்க பெரிமாமா இல்லையே என்று மருமக்களும் ஏங்குகின்றார்கள்.**

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**தாய், சகோதரங்கள்,**
**குடும்பத்தினர்.**

*'பிரபை மஹால்'*
*உரும்பிராய்ச் சந்தி,*
*உரும்பிராய்.*

(80645)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி அருள்வதி கருணானந்தன் B.A.

(யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய ஆசிரியையும் பட்டப்பின் படிப்பு 2ஆம் வருட மாணவியும்)

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 1970-06-11 | 2000-10-23 |

**திங்கள் ஒன்று மறைந்ததம்மா - எங்கள்**
**குல விளக்கு அணைந்ததம்மா**
**வெள்ளி ஒன்று மறைந்ததம்மா - எங்கள்**
**குரலோசை தணிந்ததம்மா**
**நீ மறைந்த தவிப்பினிலே நெஞ்சம் வாடுதம்மா**
**நீ மறைந்த செய்தி கனவாகாதோன்று**
**நெஞ்சம் தவிக்குதம்மா**
**நீ வருவாயென எம்மனம் வாசல் வழி**
**போகுதம்மா - ஆனால்**
**நீயோ என்றும் மீளத்துயில் கொண்டதேனம்மா?**
**செங்கமலப் பாதத்திறைவன் மடி மீதிருந்து**
**எமது துயர் தீர்ப்பாயே!**

பாசத்தின் அருளே உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர்ப் பூங்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பக் குலவிளக்கு **திருமதி அருள்வதி கருணானந்தன்** அவர்கள் மீளாத்துயில் கொண்ட செய்தி கேட்டு மீளாத்துயர் கொண்ட எங்களுக்கு நேரிலும், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகை, தபால், தொலைபேசி மூலமும் அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்து எங்கள் துயரில் பங்குகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் -

மலர் மாலை, மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்தி இரங்கல் உரையாற்றிய யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம், யா/ஏழாலை மகா வித்தியாலயம் ஆகியவற்றின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் வலி.தெற்கு பிரதேச சபை உத்தியோகத்தர்களுக்கும் சுன்னாகம் வர்த்தக சங்கத்தினருக்கும் யாழ்.இந்துக் கல்லூரி பட்டப்பின் படிப்பு 2ஆம் வருட மாணவர்கள், விரிவுரையாளர்களுக்கும் -

யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றிய வைத்தியர்கள், தாதிமார், சிற்றூழியர் அனைவருக்கும் எங்கள் கரம் கூப்பி, சிரம் தாழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (22.11.2000) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரிவின் கொடுந் துயராற்றாத*
**கணவன், மகன், தகப்பன்,**
**சகோதர, சகோதரிகள்,**
**மாமன், மாமி, பிறமக்கள்,**
**மருமக்கள், மைத்துனி,**
**மைத்துனர்கள்.**

*'சிவகுரு வீதி'*
*ஏழாலை மத்தி,*
*ஏழாலை.*

(C/13909)

தொலைபேசி உரையாடல் நிகழ்ச்சியில்

# ஜனாதிபதியை அவதூறாகப் பேசிய இளைஞன் மனநோயாளியாம்!

கொழும்பு,நவ.21

'லக்கண்ட' வானொலி சிங்கள சேவையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற தொலைபேசி மூலம் நேயர்களுடன் உரையாடும் நிகழ்ச்சி ஒன்றில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் உரையாடிய இளைஞர் ஒருவர் சித்த சுவாதீனமற்றவர் என பிரஸ்தாப இளைஞர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பு மாவட்ட நீதிவான் வி.வி.குணதிலக முன்னிலையில் இவ்விடயம் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே சட்டத்தரணி இவ்வாறு தெரிவித்தார்.

தமது விசாரணைகளின்போது பிரஸ்தாப இளைஞர் அவ்வாறு குறைபாடு உடையவராக தங்களுக்குத் தெரியவில்லையென இளைஞரைக் கைதுசெய்த கறுவாக் காட்டுப் பொலீஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளைத் தொடர்வதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பொலீஸார் நாடியுள்ளனர்.

சந்தேகநபரை மனநோயாளர் ஆஸ்பத்திரி ஒன்றுக்கு அனுப்பி மருத்துவ அறிக்கையைப் பெற்றுக் கொள்ளுமாறு நீதிவான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

எதிர்வரும் முதலாம் திகதிவரை இளைஞரைத் தடுப்புக் காவலில் வைத்திருக்குமாறு நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (உ-8)

## இளம் குடும்பஸ்தர் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி,நவ.21

நெல்லியடிச் சந்தியில் பொலீஸாரின் தாக்குதலுக்கு இலக்கான இளம குடும்பஸ்தர் ஒருவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பத்து தினங்களுக்கு முன்னர் தனது அடையாள அட்டைகளைத் தொலைத்த இந்த நபர் வதிரியில் உள்ள உறவினர்களைப் பார்த்து விட்டு நெல்லியடியில் உள்ள வீட்டுக்கு வந்த வேளையில் கடந்த வியாழக்கிழமை இரவு அவர் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீசாலை தெற்கைச் சேர்ந்த மார்க்கண்டு ரகுமாரன் (வயது 35) என்பவரே முகத்தில் காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

(ம-117)

## மாணவர் பொதுக்கூட்டம்

நாளை (22.11.2000) புதன்கிழமை யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்கான முக்கிய பொதுக்கூட்டம காலை 9.00 மணிக்கு யாழ்.கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

பல்கலைக்கழக (U.S.U.)
மாணவர் ஒன்றியம்.

(80731)


## இலங்கை வங்கி அறிவித்தல்

20.11.2000த்தில் இருந்து எமது நிலையான வைப்புக் கணக்கின் வட்டி வீதம் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

| காலம் | வட்டி விவரம் | வட்டி |
|---|---|---|
| 2 வருடம் | முதிர்வின் பின் | 14.5% |
| 2 வருடம் | மாதம் | 12.75% |
| 1 வருடம் | முதிர்வின் பின் | 14% |
| 1 வருடம் | மாதம் | 13% |
| 6 மாதம் | முதிர்வின் பின் | 15% |
| 3 மாதம் | முதிர்வின் பின் | 15% |
| 3 மாதம் | 10 மில்லியனுக்கு கூடிய தொகை முதிர்வில் | 15.5% |
| 1 மாதம் | 1.5 மில்லியனிலிருந்து 5 மில்லியன் வரை | 12% |
| 1 மாதம் | 5 மில்லியனுக்குக் கூட | 13% |

சேமிப்பு சான்றிதழ்

| | |
|---|---|
| 6 மாதம் | 15% |
| 12 மாதம் | 14% |
| 24 மாதம் | 14.5% |

"புதிய நூற்றாண்டின் தேசத்தின் ஒளிவிளக்கு"

பிரதான முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

பிரதேச முகாமையாளர்,
இலங்கை வங்கி,
பிரதேச காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

(C13918)

## மக்கள் வங்கி

மகிழ்ச்சியுடன் அறிமுகப்படுத்தும்
குறுகிய கால வைப்புக்களுக்கான
கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள்
நிலையான வைப்புக்களுக்கான அதிகரிக்கப்பட்ட
வட்டி விகிதங்கள்

| வைப்புக்காலம் | அதிகுறைந்த தொகை | வருட வட்டி |
|---|---|---|
| 3 மாதம் | 1000 ரூபா | 15% |
| 6 மாதம் | 1000 ரூபா | 14% |
| 12 மாதம் | 1000 ரூபா | 13% |

(C13919)

நீங்களும் ஓர் அதிர்ஷ்டசாலி ஆகலாம்

## மக்கள் வங்கியின்

ஒப்பற்ற

## ஜயசிறி

பரிசுத் திட்டத்தின்கீழ் இதுவரை 20 அங்குல வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பரிசாகப் பெற்ற 17 அதிர்ஷ்டசாலிகளுடன் இணைந்து கொள்ளும் ஐப்பசி மாத அதிர்ஷ்டசாலிகளாக இதோ மேலும் நால்வர்.

| கிளை | கணக்கு இல. |
|---|---|
| யா/ஸ்ரான்லி வீதி | 10711 |
| யா/ஸ்ரான்லி வீதி | 55245 |
| சுன்னாகம் | 19750 |
| சாவகச்சேரி | 15657 |

*வங்கிக் கிளை முகாமையாளரைச் சந்தியுங்கள்.*

(C13919)

# பேராசிரியர் கா.சிவத்தம்பிக்கு தமிழக அரசின் அதிஉயர் விருது

சென்னை,நவ.21

தமிழக அரசால் வருடந்தோறும் வழங்கப்படும் ஆறு அதிஉயர் விருதுகளில் ஒன்று பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பிக்குக் கிடைத்துள்ளது.

"திரு.வி.க. விருது" அவருக்கு வழங்கப்படவுள்ளது. எதிர்வரும் 24 ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ள விழாவில்வைத்து, பேராசிரியர் சிவத்தம்பிக்கு விருதும், விருதுக்கான சான்றிதழும், ஒரு லட்சம் இந்திய ரூபா பொற்கிழியும் தமிழக முதலவர் மு.கருணாநிதியினால் வழங்கப்படும் தங்கப்பதக்கமும் சூட்டப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நீண்டகாலமாகப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற பேராசிரியர் சிவத்தம்பி இப்போது வாழ்நாள் பேராசிரியராவார்.

1997 ஆம் ஆண்டில் யாழ்.பல்கலைக்கழகம் இவருக்கு இலக்கியக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

ஜப்பானியப் பல்கலைக்கழகமும் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இவருக்கு உயர் கலாசார விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது.

ஜப்பான் மற்றும் மேற்கு நாடுகளின் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் வருகைப் பேராசிரியராகவும் அதிதி நிலைப் பேராசிரியராகவும் தற்போது பணிபுரியும் இவர் மொழியியல், கலை, கலாசாரத் துறைகளில் பல ஆராய்ச்சிகளையும் செய்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள பல் தமிழ் ஆய்வு நிறுவனங்களிலும், தமிழ் இலக்கிய நிறுவனங்களிலும் உறுப்பினராகவுள்ள பேராசிரியர் அங்கு நடைபெறும் பல கருத்தரங்குகளிலும கலந்து கொள்கிறார்.



உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,உலகத் தமிழ் இலக்கிய வரலாறு சம்பந்தமான நூல் ஒன்றை வெளியிட உள்ளது. அதனை எழுதவுள்ள உயர் ஆசிரியர் குழுவில் பேராசிரியர் கா.சிவத்தம்பி அங்கம்வகிக்கிறார்.

சிறந்த அறிஞரும் ஆய்வாளரும் விமர்சகரும் பேச்சாளருமான பேராசிரியர் கா.சிவத்தம்பிக்குக் கிடைத்த விருது யாழ்ப்பாணத்துக்குப் புகழ் தேடித்தந்துள்ளது.

தமிழக அரசின் ஏனைய ஐந்து உயர் விருதுகளான பாரதியார், பாரதிதாசன், பெரியார், அம்பேத்கார், கி.ஆ.பெ. ஆகிய விருதுகள் முறையே கவிஞர் வாலி, பாவேலர், மணிவேலன், திருச்சி செல்வேந்திரன், முன்னாள் அமைச்சர் என்.ராஜாங்கம் ஆகியோருக்குக் கிடைத்துள்ளன. (அ-ஐ)

## புலிகளின் வெற்றி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் நடத்திவருகின்றது. உண்மைகளை மூடிமறைத்து, பொய்மையும் புரட்டையும் நுட்பமாகப் புனைந்து, சாணக்கியத் திறமையுடன் நடத்தப்படும் இந்தக் கருத்துப் போரின் முக்கிய குறிக்கோள் எமது விடுதலைப் போராட்டத்துக்குக் களங்கம் கற்பிப்பதாகும்.

ஓர் இனத்தின் தேச விடுதலைப் போர் என்ற பரிமாணத்தில் எமது உரிமைப் போராட்டம் முழு உலகின் கவனத்தையும் ஈர்த்து வருகின்றது. அத்தோடு போரியல் கலையிலும் எமது இயக்கம் ஈட்டிவரும் அபார சாதனைகள் சர்வதேசத்தை திகைப்பிலும் ஆழ்த்திவருகின்றன. இப்படியாக எமது இயக்கமும் எமது விடுதலைப் போராட்டமும் அனைத்துலக ரீதியாக அடைந்துவரும் பேரையும் புகழையும் சகிக்க முடியாத சிங்களப் பேரினவாதம் எமக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் ஒரு விஷமத்தனமான பிரசாரப் போரை நடத்திவருகின்றது.

வீரம் செறிந்த எமது விடுதலைப் படையணிகளை குழந்தை இராணுவம் என கொச்சைப்படுத்தியும் -

நுட்பம் மிக்க எமது போர் நடவடிக்கைகளை பயங்கரவாதம் எனச் சித்திரித்தும் -

எமது இயக்கத்துக்கு இழிவு தேட முனைகிறான் எதிரி.

அனைத்துலக ரீதியாக எமக்கு அணி திரண்டு வரும் ஆதரவையும் அனுதாபத்தையும் தடுத்து நிறுத்தி, உலக அரசுகளை எமக்கு எதிராகத் திருப்பி விடுவதுதான் எதிரியின் நோக்கம்.

சிங்களத்தின் பொய்யான பரப்புரைகளை விசாரணையின்றி விளங்கிக் கொண்ட ஒருசில நாடுகள் எமது இயக்கத்துக்கு பயங்கரவாத முத்திரை குத்தி தடைசெய்தும் உள்ளன. இது எமக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் தருகிறது.

பொய்களையே ஆயுதமாகக் கொண்டு நடத்தப்படும் சிங்களத்தின் விஷமத்தனமான கருத்துப் போரை முறியடிப்பதே இன்று நாம் எதிர்கொண்டிருக்கும் முக்கிய சவாலாகும். எமது இயக்கத்தின் வெகுசன ஊடகங்களே இந்தப் பெரும் பணியைச் செய்ய வேண்டும். இந்த வகையில் எமது இயக்கத்தின் முக்கிய மக்கள் தொடர்புச் சாதனமான 'புலிகளின் குரல்' வானொலியின் பணி பெரிதும் பாராட்டத்தக்கது. உண்மையின் குரலாக ஒலித்து, ஒடுக்கப்படும் எமது மக்களின் உரிமைக்காகக் குரல் எழுப்பி, எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்குமாக 'புலிகளின் குரல்' ஆற்றிவரும் பணி அற்புதமானது.

போர்ச் சூழலில் - மிகவும் நெருக்கடியான புற நிலையில் - எத்தனையோ இடையூறுகளுக்கும் சவால்களுக்கும் முகம்கொடுத்து - கடந்த பத்து ஆண்டு காலமாக புலிகளின் குரல் மகத்தான சேவையாற்றி வந்துள்ளது. இவ் வானொலியின் மாபெரும் வெற்றிக்கு உறுதுணையாக நின்று சேவையாற்றிவரும் நிர்வாகப் பொறுப்பாளர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள். 'புலிகளின் குரல்' வானொலியின் உன்னதமான விடுதலைப் பணி செம்மையாகத் தொடர எனது நல்வாசிகள் -

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'புலிகளின் குரல்' வானொலியின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் புலிகளின் மூத்த உறுப்பினரும் கல்விக் கழகப் பொறுப்பாளருமான வி.இளங்குமரன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்ததோடு ஆரம்பமானது.

தொடர்ந்து மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், பண்டிதர் சு.வே.பஞ்சாட்சரம் ஆகியோர் மங்கள விளக்குகளை ஏற்றினர்.

'புலிகளின் குரல்' பொறுப்பாளர் நா.தமிழன்பன் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வரவேற்புரையை 'புலிகளின் குரல்' பிரதிச் செய்தி ஆசிரியர் ரி.தவபாலன் நிகழ்த்தினார். 'புலிகளின் குரல்' 10 ஆவது ஆண்டு நிறைவு விழா மலர் வெளியீட்டுரையை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமார் நிகழ்த்தினார். அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

இந்த ஆண்டு விழாவை ஒட்டி நடத்தப்பட்ட கலை, இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு தலைவர் பிரபாகரனின் கையொப்பத்துடன் கூடிய பாராட்டுச் சான்றிதழ்கள் பரிசளிக்கப்பட்டன. (உ-3)


மீண்டும்! விரைவில்!!

உங்கள் அபிமான வார இதழ்

சஞ்சீவி

ஆவலுடன் எதிர்பாருங்கள்!


## வடக்கு நோக்கி தாழமுக்கம்

இலங்கைக்கு மேற்கே தாழமுக்கம் ஒன்று உருவாகியுள்ளதாக வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து 150 கிலோமீற்றர் தொலைவில் உருவாகியுள்ள இந்தத் தாழமுக்கம் வடக்கு நோக்கி நகர்ந்து வருவதாகவும் -

இதனால் காலி முதல் மன்னார் வரையிலான கரையோரப் பிரதேசங்களில் மணித்தியாலத்துக்கு 60 முதல் 80 கிலோமீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசுவதோடு அப் பிரதேசங்களை அண்டிய கடற்பகுதி கொந்தளிப்புடன் காணப்படும் எனவும் -

மேற்கு, தெற்கு, வடமேற்கு, சப்பிரகமுவ மாகாணங்களில் கடும் மழை பெய்யக்கூடும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-8)

## மாவீரர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்படுத்தல், மரநடுகைப் பணிகளை மேற்கொள்ளுதல் உயிர்க் கொலைகளைத் தவிர்த்தல், தான தர்மங்களைப் புரிதல், மது அருந்துவோர் அதனைத் தவிர்த்தல், சினிமா உள்ளிட்ட கேளிக்கை நிகழ்வுகளைத் தவிர்த்தல், ஆலயங்களிலும் தேவாலயங்களிலும் மாவீரர் இலட்சிய ஈடேற்றத்துக்காகப் பிரார்த்தித்தல் ஆகிய கைங்கரியங்களில் ஈடுபடுமாறு விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

வன்னி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் மாவீரர் வார நிகழ்ச்சிகளை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (உ-3)

## பிஸ்டல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்த பொலீஸார் ஒருவர் வெளியே வீதிக்கு ஓடி வந்து பதில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகின்றது.

ஹோட்டலுக்குப் பக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு காரின் சாரதி துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களைக் கேட்டு அவசரமாகத் தமது காரை இயக்கி அதனைச் செலுத்தத் தொடங்கிய போது காரின் மீது அந்த வேட்டுக்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதனால் காரின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த ஒருவர் உயிரிழந்தார். காரச் சாரதியும் மற்றொருவரும் காயமடைந்தனர்.

ஆபத்தான இலங்கை இரு பொலீஸாரும் மற்றும் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட யாழ்.பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த - விஜேயவீர (வயது35) என்பவர் பின்னர் அங்கு மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பொலீஸ் கான்ஸ்டபிளான நிமல் குணரட்ண, பருத்தித்துறையைச் சேர்ந்த காரச் சாரதியான கந்தசாமி செல்வராசா (வயது 25), புலோலி கிழக்கைச் சேர்ந்த ஜெகதீஸன் ஜெகமோகன் (வயது 24) ஆகியோர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

ஜெகதீஸன் ஜெகமோகன் தனது காயத்துக்குச் சிகிச்சை பெற்றபின்னர் வீடு திரும்பினார். இந்தச் சம்பவத்தில் குறிப்பிட்ட காரின் உரிமையாளரான எஸ்.முரளீதரன் (வயது23 - சிவப்பிரகாசம் பாடசாலை வீதி, கும்பளை) என்பவரே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரின் சடலம் யாழ் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக குறிப்பிட்ட ஹோட்டலின் உரிமையாளர் உட்பட ஆறு பேர் பொலீஸாரினால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். (உ-3-6-15-139)


### பிரத்தியேக வகுப்புக்கள்

கட்டுடை - மானிப்பாய்

*இரசாயனவியல்* - திரு.மணியம்

| | |
|---|---|
| புதன் | 3.00 - 4.00 2001 A/L(மீட்டல்) |
| வியாழன் | 4.00 - 5.00 2002 A/L |

*இணைந்த கணிதம்* :- திரு.U.குணம்

| | |
|---|---|
| புதன் | 4.00 - 5.30 2001 A/L(மீட்டல்) |
| வியாழன் | 3.00 - 4.00 2002 A/L |

(80732)


# பத்துப் பெண் போராளிகளினதும் சடலங்கள் புலிகளிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,நவ.21

மட்டுவில் தெற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் பத்துப் பெண் போராளிகளின் சடலங்கள் யாழ்.குடாக்கடலை அண்டியுள்ள கல்முனைப் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

குருநகர் இறங்குதுறையில் வைத்துப் படை அதிகாரிகளிடம் சடலங்களைப் பொறுப்பேற்ற செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் படகுகள் மூலம் அவற்றை எடுத்துச் சென்று நேற்றுப் பிற்பகல் கல்முனைப் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தனர். (உ-3-5-6-15-139)

## தென்னிலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகரில் பாரிய தாக்குதலைப் புலிகள் மேற்கொள்ளலாம் என்று கருதியே பாதுகாப்பு தீவிரமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு நகரில் ஊடுருவியுள்ளதாகக் கருதப்படும் 46 கரும்புலிகள் எந்தநேரமும் தாக்குதல்களை நடத்தலாம் என்பதால் தேடுதல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் - பொலீஸார் தெரிவித்துள்ளனர். (உ-3)

## காலநிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து அந்தப்பயணிகள் மீண்டும் யாழ்ப்பாணம் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

காலநிலை இன்று சீராகும் பட்சத்தில் விமானச் சேவை இன்று இடம்பெறும் என்றும் -

அவ்வாறு சேவை இடம்பெற்றால் நேற்று பயணத்துக்காக பலாலிக்குச் சென்று திரும்பியவர்களுக்கு அச்சேவையில் இடம் அளிக்கப்படும் என்றும் -

யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தின் அதிகாரி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார். (உ-3)

## நிமலராஜன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படியும் இந்தத் தீர்ப்பை வழங்குகிறேன்.

இவரின் மரணம் ஒரு பாரிய கொலை தொடர்பான குற்றச் செயலாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பூரண புலன் விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கட்டளை இடுகிறேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை அடுத்த மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (உ-3-5-6)

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்"

தெய்வமாகிவிட்ட எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் இராசா மகாலிங்கம்

(உரிமையாளர் - மகாலிங்கம் ரெக்ஸ்ரைல்ஸ், எகலியகொடை)

அவர்களின்

**31ஆவது நினைவு நாள்**

**இன்று (21.11.2000) செவ்வாய்க்கிழமை**

இன்று (21.11.2000) செவ்வாய்க்கிழமை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் வேண்டுகின்றோம். நாங்கள் ஒவ்வொருவருடைய இல்லங்களுக்கும் தனிப்பட்ட அழைப்பிதழ்களை அனுப்பியுள்ளோம். இதில் சில தவறுதல் காரணமாகத் தங்கள் கரங்களில் அவை கிடைக்காமல் இருக்கலாம். தயவுகூர்ந்து எங்களை மன்னித்து எங்களுடைய ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் தாங்களும் தங்கள் குடும்பமும் சேர்ந்து வந்து பங்குபற்றுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

நன்றி வணக்கம்

மனைவி,மக்கள்,
மைத்துனர் கு.கங்கைவேணியன்.

தற்போதைய முகவரி:-
*108,பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

நிரந்தர முகவரி:-
*புளியங்கூடல்,*
*ஊர்காவற்றுறை.*

(C/13920)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னையா தங்கம்மா

ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னையா தங்கம்மா அவர்கள் நேற்று (20-11-2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாப்பாணர் நல்லபிள்ளையின் அன்பு மகளும் கந்தையா சின்னையாவின் அன்பு மனைவியும், சிவநேசன் (விசுவமடு), இராசநாயகம், சறோஜினிதேவி (கனடா), காந்திமலர், செல்வநாயகி (உப தபால் அதிபர், அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை) பத்மாவதி, காலஞ்சென்ற வாமதேவன், கங்காதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணவதி, சரஸ்வதி, பாலசுப்பிரமணியம் (கனடா), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோயன், சர்மிலன், சர்மிலா (விசுவமடு), விநோஜா (ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாசாலை மாணவி), அஞ்சனா, றஜீவன் (கனடா), நிறாயன், அநிரா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கதிரேசு (கனடா), காலஞ்சென்ற நடராசா (திருகோணமலை), துரைசிங்கம் (நவிண்டில்) ஆகியோரின் சகோதரியும் பரமேஸ்வரி, சிவபூரணம் (கனடா), அன்னம்மா (நவிண்டில்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-11-2000) செவ்வாய்க்கிழமை சந்தை வீதி, ஆவரங்காலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரதடி இந்து மயானத்தில் பிற்பகல் 2.00 மணிக்குத் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**க.சின்னையா** (கணவன்)

*சந்தை வீதி,*
*ஆவரங்கால்.*

(C/13924)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.